விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 10.03.2021 புதன்கிழமை | இதழ் : 100 | பக்கங்கள் : 16



07
ஐ.நாவிடம் நீதி கேட்டு அரசினது பொறுமையை சோதிக்கின்றனர்



09
ராஜதந்திர நெருக் கடிக்குள் இலங்கை?



12
மலை நிறைந்த தங்கம்! அள்ளிச் சென்றனர் மக்கள்



14
யுத்தத்துக்கு பின்னர் முல்லையில் 67 பௌத்த விகாரைகள்

# பிரேரணையை மேலும் வலுப்படுத்துமாறு ஸ்கன்டினேவியன் நாடுகள் வலியுறுத்து!

## ஜெனிவா தீர்மானம் இன்று இறுதியாக்கப்படும்?

ஜெனிவா, மார்ச் 10.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் இலங்கை குறித்த தீர்மானம் மேலும் வலுவான சரத்துக்களை கொண்டதாக மாற்றப்படவேண்டும் என ஸ்கன்டிநேவியன் நாடுகளான நோர்வே, டென்மார்க், சுவீடன் ஆகியன வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டன் தலைமையிலான இணைத் தலைமை நாடுகளால் தயாரிக்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்ட வரைவு தற்போது, பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டு உத்தியோகப்பற்றற்ற முறையிலான கந்தாலோசனைகள் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்றுவருகின்றன.

இந்தக் கலந்துரையாடல்களின்

02

# ஜெனிவா பிரேரணையை தோற்கடிப்பது கடினமே!

## ஒப்புக்கொள்கின்றது அரச தரப்பு



கொழும்பு, மார்ச் 10

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணையை தோற்கடிப்பதென்பது கடினமாக செயலாகும் என்று பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

02



## கிளிநொச்சி குளத்தில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்!

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி அப்பாள் குளம் பகுதியில் பெண்ணின் சடலம் ஒன்று கரையொதுங்கி யுள்ளது. குறித்த

02

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை தூக்கு மேடைக்கு அனுப்புவதற்கு சர்வதேசத்தின் உதவி அவசியமானது

### வலியுறுத்துகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச்.10

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் முக்கிய சூத்திரதாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகத்திடம் உதவி கோரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையால் ஈஸ்டர் தாக்குதலுக்கு வழிவகுத்த காலத்தில் இரண்டு அரசாங்கங்கள் இருந்ததாக அந்தக் கட்சியின்

02



## சிறைக் கொத்தணி 5019 ஆக உயர்வு!

கொழும்பு, மார்ச்.10

சிறைச்சாலைகளில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் கொத்தணி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இதுவரை 5019 ஆக அதிகரித்துள்ளது என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை

02

## இ.போ.ச. காரைநகர் சாலைக்கு பஸ் சேவையை நடத்த அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்.10

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை ஊழியர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய சாலைகளின் ஊழியர்களைப் பணிக்கு அமர்த்தி பஸ் சேவைகளை நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எனினும், காரைநகர் சாலை பஸ் சேவைகள் இன்றும் இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 90 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சாரதிகள் மூவர், நடத்துநர்கள் மூவர் மற்றும் காப்பாளர் இருவருக்கே கொரோனா

02

## ஓட்டமாவடியில் நேற்றும் 7 ஜனாஸாக்கள் அடக்கம்!

வாழைச்சேனை, மார்ச் 10

கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் ஜனாஸாக்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லடக்கம் செய்யும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை ஐந்தாவது நாளாகவும் இடம்பெற்றது.

02

## வடக்கில் மேலும் 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம்,மார்ச்.10

வடக்கு மாகாணத்தில் மேலும் 28 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 10 பேர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டுள்ளனர் என்று

02

# அரசியல் ரீதியான அணுகுமுறையை சர்வதேச சமூகம் கைவிடவேண்டும்!

## மனித உரிமைகள் அடிப்படையில் விடயங்களை அணுக விக்கி வலியுறுத்து

யாழ்ப்பாணம். மார்ச் 10.

“சர்வதேச சமூகம், இலங்கை விடயத்தில் இனிமேலும் அரசியல் ரீதியான அணுகுமுறையைப் பின்பற்றாமல் மனித உரிமைகள் அடிப்படையிலான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து உரிய நடவடிக்கைகளை

02



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## அரசியல்....

எடுக்கவேண்டும். மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாரின் அறிக்கை அத்தகைய மனித உரிமைகள் அடிப்படையிலான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றது. ஆனால், தற்போது, மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் பூச்சிய அறிக்கை அரசியல் அணுகுமுறை அடிப்படையில் அமைந்திருக்கின்றது".

-இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அமெரிக்காவிலுள்ள ஒக்லன்ட் நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்ட "Endless War – The destroyed Land, Life and Identity of the Tamils in Sri Lanka" என்ற ஆவணத்தின் வெளியீடு மெய்நிகர் நிகழ்வாக யாழ். ஊடக மையத்தில் நேற்று நண்பகல் நடைபெற்றபோது நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று நாம் அறிமுகப்படுத்தும் அறிக்கை மிகவும் முக்கியமானது. ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் எத்தகைய தீர்மானம் கொண்டு வருவது என்று உறுப்பு நாடுகள் ஆராய்ந்து வரும் வேளையில் இந்த அறிக்கை வெளிவந்திருப்பது மிகவும் பொருத்தமானது.

தமிழ் மக்கள் தமது பூர்வீக இடங்களில் எந்தளவுக்கு தமது நிலங்கள், பாரம்பரிய வாழ்வு முறை, அடையாளம் என்பவற்றை இழந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை ஆதாரபூர்வமாக முழு உலகத்துக்கும் மட்டுமன்றி எமது மக்களுக்கும் இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது. ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் நாடுகளின் கண்களை இந்த அறிக்கை திறக்கும் என்று நான் நம்புகின்றேன். அதேபோல, எமது மக்களின் கண்களையும் இந்த அறிக்கை திறந்துவிட்டிருக்கின்றது. இந்த அறிக்கையைத் தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்த்து நாம் விநியோகிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமது நிலங்கள் பறிபோகின்றன, புராதன சின்னங்கள் அழிக்கப்படுகின்றன, தமது வாழ்வாதாரம் சுரண்டப்படுகின்றது என்று தமிழ் மக்கள் கடந்த 12 வருடங்களாக ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் நடத்தி வந்துள்ளார்கள். ஆனால், அவற்றை சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு காத்திரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்திருக்கவில்லை. இதனால் தான் இன்று நிலைமை இந்தளவுக்கு மோசம் அடைந்திருக்கின்றது.

தமிழ் மக்களின் நூற்றாண்டுகால பழமைவாய்ந்த வணக்கஸ்தலங்களை வலிகாமம் வடக்கில் இடித்து தரைமட்டம் ஆக்கி அவற்றின் மீது இராணுவ மாளிகைகளை கட்டும் அளவுக்கு இராணுவம் இன்று செயற்படுகின்றது என்றால் அதற்கு சர்வதேச சமூகத்தின் பராமுகமே காரணமாகும். அதேபோல முல்லைத்தீவில் மிகவும் பாரதூரமான அளவில் இராணுவமயமாக்கலும், பௌத்த மயமாக்கலும் நடைபெறுவதை இந்த அறிக்கை அம்பலப்படுத்துகின்றது. 100க்கும் மேற்பட்ட முகாம்கள் முல்லைத்தீவில் இருப்பதும், 67 விகாரைகள் யுத்தம் முடிவடைந்த பின்னர் கட்டப்பட்டிருப்பதும் நாம் எத்தகைய அடக்குமுறைக்குள் வாழ்கின்றோம் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே, சர்வதேச சமூகம், இலங்கை விடயத்தில் இனிமேலும் அரசியல் ரீதியான அணுகுமுறையைப் பின்பற்றாமல் மனித உரிமைகள் அடிப்படையிலான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.-என்றார். (அ-எ)

## சிறைக்....

வருமாறு:

சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருந்த கொரோனா வைரஸ் கொத்தணியால் இதுவரையில் 5019 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 4789 பேர் குணமடைந்ததுடன், 217 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். -என்றார். (அ-எ)

## ஓட்டமாவடியில்....

நேற்று மாலை 04 மணிவரை ஏழு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தாரிக் தெரிவித்தார்.

இதில் ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களது ஜனாஸாக்களுமாக ஏழு ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கமைய ஐந்து நாட்களில் 38 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தாரிக் மேலும் கூறினார்.

## கிளிநொச்சி....

பெண் 30 வயது மதிக்கதக்கவர் என்பதுடன் பாதணிகள், கைப்பை ஆகியனவும் சடலத்துடன் மீட்கப்பட்டுள்ளன.

சடலத்தை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பார்வையிட்டதன் பின்னர் மரண விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வடக்கில்....

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 255 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இவர்களில் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 6 பேர் நேற்று முன்தினம் உடுவிலில் கண்டறியப்பட்ட இலங்கை வங்கி ஊழியர் ஒருவருடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

மேலும் மூவர் இ.போ.ச. காரைநகர் சாலை நடத்துநர் ஒருவருக்கு நேற்று முன்தினம் தொற்று கண்டறியப்பட்ட நிலையில் அவருடைய உறவினர்கள்.

ஒருவர் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்று அதிகாரி பதவியில் உள்ளவர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று 450 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 18 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் நகரில் 16 பேருக்கு தொற்று நேற்று கண்டறியப்பட்டது. இவர்களில் 8 பேர் மன்னார் மீன் சந்தையில் கண்டறியப்பட்டுள்ளனர்.

மன்னார் மீன் சந்தைத் தொழிலாளி ஒருவர் ரயிலுடன் மோதி உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இதனால் மன்னார் மீன் சந்தையில் நேற்று எழுமாறாக சிலரிடம் மாதிரிகள் பெறப்பட்டன. இவர்களில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் தனியார் நிதி நிறுவனமான கொமர்ஷல் கிறடிட்டின் மன்னார் கிளையில் பணியாற்றும் சிலருக்கு கொரோனா தொற்று அண்மையில் கண்டறியப்பட்டது. அங்கு பணியாற்றும் மேலும் இருவருக்கு தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், மன்னார் நகர் தொற்றாளர்களுடன் தொடர்புடைய மேலும் 6 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 29 வயது கர்ப்பவதிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

# இரவோடிரவாக அள்ளிச்செல்லப்பட்ட தாயகப் பிரதேச காணி ஆவணங்கள்?

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடுமையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் வடக்கு மாகாணத்திற்குரிய அனைத்து காணிகளுக்கான ஆவணங்களும் அநுராதபுரம் மாவட்ட செயலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என நேற்று இணையத்தளங்கள் சில செய்தி வெளியிட்டன.

கடந்த 4 ஆம் திகதி இவ்வாறு ஆவணங்களை எடுத்துச் செல்ல முற்பட்டபோது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் பொதுமக்களும் யாழ்.செயலக வாசலுக்கு முன்பாக ஒன்று கூடி கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

ஆனால் அது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் முடிவு என்றும் தன்னால் எதுவும் செய்ய முடியாது எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன் அப்போது தெரிவித்திருந்தார்.

அத்துடன் இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான நடவடிக்கைக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில்நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை அவசர அவசரமாக அனைத்து காணி ஆவணங்களும் யாழ். மாவட்ட செயலகத்தில் இருந்து அள்ளிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தின் படி வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட்டது.

ஆனால் இன்று வரை அது நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிலையில் ஏற்கனவே வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களப் பிரதேசத்தைச் சேர்ந்த தனியாருக்கு விற்கப்பட்டு வந்தன. சில காணிகள் தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கும் கொடுக்கப்பட்டு வந்தன. பௌத்த விகாரைகளுக்கும் புத்தர் சிலை வைப்பதற்கும் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தால் அனுமதியும் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், வடமாகாணத்துக்குரிய அனைத்து காணி ஆவணங்களும் அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, அநுராதபுரம் பிரதான மின்மாற்றியில் நேற்று முன் தினம் இரவு தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாக கூறப்பட்டது. இதனால் வடமாகாணத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே யாழ். செயலகத்திலிருந்து காணி ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

## ஈஸ்டர் தாக்குதல்....

முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

மேலும் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உளவுத்துறை தகவல்களை இந்தியா முன்னரே வழங்கியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை தூக்கு மேடைக்கு அனுப்ப வேண்டுமானால், சர்வதேச சமூகத்தின் உதவியை நாடவேண்டும் என்றும் வஜிர அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

## ஜெனிவா....

ஜெனிவாத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை தோற்கடிப்பதற்கு 24 நாடுகளின் ஆதரவு அவசியம். அதற்கான சாத்தியம் உள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தற்போதைய பூகோள அரசியலின் அடிப்படையில் இது கடினமான செயலாகும். போர்க்காலத்தில் நடந்த சம்பவங்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு பிரேரணை வந்திருந்தால் 24 அல்ல 47 நாடுகளின் ஆதரவைக்கூட பெற்றிருக்கலாம்.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட பதினான்கரை (14.5) பக்கங்கள் கொண்ட அறிக்கையில், பதினொன்ரரை (11.5) பக்கங்களில் கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலேயே விவரிக்கப்பட்டுள்ளது. இதனால் பூகோள அரசியல் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எதுஎப்படி இருந்தாலும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு தொடர்பில் முடிவொன்றை காணவேண்டும் என 'கோ குறூப்' நாடுகளிடம் தெரிவித்துள்ளோம். இப்பிரச்னையை அடுத்த தலைமுறைக்கு விட்டுவைக்ககூடாது. இதற்கு மேற்குலகம் உடன்படுமா என்பது எமக்கு தெரியாது.

இணை அனுசரணை வழங்குமாறு இம்முறையும் இலங்கையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை நாம் ஏற்கவில்லை. பிரேரணை. தீர்மானம் என்னவாக இருந்தாலும், அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகளுடன் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் சிறந்த உறவு இருக்கின்றது. எனவே, பொருளாதாரத் தடை உட்பட கடுமையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது என நம்புகின்றோம். பொருளாதாரத் தடை விதிப்பதாக இருந்தால்கூட அதனை ஐ.நா. பாதுகாப்பு சபை ஊடாகவே முன்னெடுக்கவேண்டும்.

அதேவேளை, அரபுலகம் இலங்கைக்கு ஆதரவு வழங்கும். இந்தியாவும் நேசக்கரம் நீட்டும் என நம்புகின்றோம்-என்றார். (அ)

## இ.போ.ச....

தொற்று கண்டறியப்பட்டது.

இதனால் காரைநகர் சாலையில் பணியாற்றும் 110 ஊழியர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களிடம் அடுத்த வாரமே பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதுவரை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஏனைய சாலை ஊழியர்களை கடமைக்கு அமர்த்தி காரைநகர் சாலை பஸ் சேவைகளை நடத்துமாறு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

## பிரேரணையை....

போதே இதனை மேலும் வலுப்படுத்துமாறு ஸ்கன்டிநேவியன் நாடுகள் வலியுறுத்திவருகின்றன.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள கலந்தாலோசனைகளின் பின்னர் வரைவை இறுதியாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கலந்துரையாடல்கள் பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்று வருவதாக பிரிட்டன் நேற்று தெரிவித்திருந்தது. தீர்மானத்தின் இறுதி வரைவு தொடர்பில் பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் சுழற்சி முறையிலான கலந்துரையாடல்களை பிரிட்டன் ராஜதந்திரிகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த வாரம் இடம்பெற்ற கலந்தாலோசனைகளின்போது இந்த வரைவைத் தாம் முற்றாக நிராகரிப்பதாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இருந்தபோதிலும், பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் தற்போதைய வரைவு வலுவற்றதாக உள்ளதாகவும், அதில் வலுவாக சொற்கள் சேர்க்கப்பட்டால், மேற்குலக நாடுகள் குறிப்பாக ஸ்கன்டிநேவியன் நாடுகள் தமது ஆதரவுகளை வழங்கும் என அந்த நாடுகளின் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடல்களின்போது தெரிவித்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.03.2021 புதன்கிழமை
சார்வரி, மாசி 27

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# யதார்த்தங்கள் கசப்பானவைதான்!

மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பில் ஒவ்வொரு கட்சிகளும் தங்களுக்கேற்ற அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன. ஒவ்வொரு மார்ச் மாதமும் இலங்கை விவகாரத்தின்மீது சில அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையில், சில அறிக்கைகளும், சர்வதேச ஊடகங்களில் சில கட்டுரைகளும் வெளிவருவதுண்டு. ‘ஒக்லாண்ட்’ என்னும் அரசுசாரா நிறுவனத்தின் அறிக்கையும் அவ்வாறான ஒன்றுதான். இது தொடர்பான கலந்துரையாடலில் பேசியிருக்கும் விக்னேஸ்வரன், சர்வதேச சமூகம் இலங்கை விவகாரத்தை அரசியல் சார்ந்து அணுகாமல், மனித உரிமைகள் சார்ந்து அணுக வேண்டுமென்று கூறி யிருக்கின்றார். விக்னேஸ்வரன்போன்ற அரசியல்வாதிகளுக்கு சர்வதேச அரசியல் யதார்த்தம் சரியாகப் புரியவில்லைப்போலும். சர்வதேச அரங்குகள் என்பதே அரசியல் அரங்குகள்தான். அந்த அரங்குகளில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் அனைத்துமே அரசியல் ரீதியான முவுகள்தாம். இந்த உண்மையை விளங்கிக்கொள்ள முடியாமல் இருப்பதும், விளங்கிக்கொள்ள முயற்சிக்காமல் இருப்பதும் அவரவர் இயலாமை அல்லது அவரவர் அறியாமையாக இருக்கலாம். ஆனால், ‘கண்களை மூடிக் கொள்வதன் மூலம் உலகம் இருண்டுவிட்டதாக பூனை நினைப்பதாக’ ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. அவ்வாறான கதையின் நாயகர்களாக வேண்டுமானால், சில அரசியல்வாதிகளும் சிவில் சமூகத் தலைவர்கள் என்போரும் இருந்துவிட்டுப்போகலாம்.

வெளிவரவுள்ள பிரேரணையை கூட்டமைப்பு ஆதரித்திருந்தது. இது, தற்போது கண்டனத்துக்குரிய விவகாரமாக நோக்கப்படுகின்றது. கூட்டமைப்பு விமர்சனத்திற்கு அப்பாற்றப்பட்ட ஒன்றல்ல. ஆனால், இந்த விடயத்தில் கூட்டமைப்பை விமர்சிக்கும்போது, அடுத்தது என்ன என்று சொல்லும் திறன் மற்றவர்களிடம் இருக்க வேண்டும். இணைத் தலைமை நாடுகளால் கொண்டுவரப்பட்டு, தற்போது பரிசீலனைக்கு விடப்பட்டுள்ள பிரேரணையை நிராகரித்து விட்டு, அடுத்து என்ன செய்வது? - இந்தக் கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை. இந்தக் கேள்விக்கு பதிலிருந்தால், மற்றவர்களை விமர்சிப்பத்தில் ஒரு பொருளிருக்கலாம். ஆனால், எவரிடமும் எந்தவொரு தீர்வும் இல்லாமல் இருக்கின்றபோது, மேற்குலகுடன் ஒத்துப்போவதில் என்ன தவறுண்டு?

சீனா மிகவும் வெளிப்படையாக இலங்கையை பாதுகாக்கின்றது. அதனை வெளிப்படையாகவே அறிவித்துமிருக்கின்றது. இந்த நிலையில், சீனா தனது அரசியல் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்கின்றபோது, ஏனைய நாடுகள் எவ்வாறு மனித உரிமைகளின் அடிப்படையில் மட்டும் விடயங்களில் தலையீடு செய்யமுடியும்? தற்போது இலங்கைக்கு ஆதரவாகவும் பல நாடுகள் பேரவையில் இருக்கின்றபோது, அவற்றை எவ்வாறு மனித உரிமைகளின் அடிப்படையில் மட்டும் மேற்குலக நாடுகள் எதிர்கொள்ளமுடியும்?

இந்த பின்புலத்தில்தான், வரவுள்ள பிரேரணையை நோக்க வேண்டும். இது, சிலர் கூறுவது போன்று தமிழர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யவில்லைத்தான். ஆனால், தமிழர்களின் பிரச்னையை சர்வதேச அரங்குகளில் நீர்த்துப் போகாமல் பாதுகாப்பதில் இதற்கு ஒரு பெரிய பங்குண்டு. இந்த அடிப்படையில், இதனை தமிழர் வரவேற்கத்தான்வேண்டும். ஏனெனில், இதனைத் தவிர வேறு வழியில்லை. சில யதார்த்தங்கள் கசப்பானவைதான். ஆனால், அதுதான் உண்மையானது. விடயங்களை கறுப்பு வெள்ளையாக மட்டும் நோக்கினால், சில யதார்த்தங்களை ஒருபோதுமே விளங்கிக்கொள்ள முடியாது. கசப்பான யதார்த்தங்களின் வழியிலும் நடக்கப்பழக வேண்டும். தமிழர்கள் அந்த யதார்த்தங்களை புரிந்துகொள்ள மறுத்தால், தமிழர்களுக்காக மேற்குலகம் காத்துக் கொண்டிருக்கப்போவதில்லை.

# அரச தரப்புக்கு சவால் விடுக்கும் உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழு அறிக்கை!

- அலசுவது இராஜதந்திரி -

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு பல முக்கிய விடயங்களை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அரசதரப்பினர் தற்போது முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைக்கும் நிலைக்கு உள்ளாகியிருப்பதை அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் குறித்து நீதிகோரி தற்போது தென்னிலங்கையில் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. இந்நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அறிக்கையின் அனைத்து சிபாரிசுகளையும் அமுல்படுத்த முடியாதென்று அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, அத்தாக்குதலின் முழு விபரங்களையும் விரிவாக தந்திருப்பதோடு, அத்தகையதொரு தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஏதுவாகவிருந்த காரணிகள் சிலவற்றையும் சுட்டிக்காட்யுள்ளது.

**பொதுபல சேனா**

இக்காரணிகளில், பௌத்த-சிங்கள அமைப்பான பொதுபல சேனாவை தடைசெய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதப் போக்குடைய பொதுபலசேனா அமைப்பு காரணமாகவே ஏனைய இன, மத ரீதியிலான தீவிரவாத நடவடிக்கைகளும் தோற்றம்பெறலாம் என்பதை கவனத்திலெடுத்து, பொதுபல சேனாவை தடைசெய்யுமாறு உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணையை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அபிப்பிராயத்தை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற கெடுபிடிகளை அரசதரப்பினர் நீண்ட நெடுங்காலமாகவே தமிழ் பயங்கரவாதம், தீவிரவாதம் எனத்தெரிவித்து வருவதை அவதானிக்கமுடியும். ஆனால், தென்னிலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின்மூலம் தென்னிலங்கையில் அனைத்து கெடுபிடி நடவடிக்கைகளையும் அரசு மூடி மறைக்க எத்தனிப்பதையே அறியக்கூடியதாக இருக்கின்றது.

**இந்திய எச்சரிக்கை**

இந்திய புலனாய்வுத்துறை இலங்கை குறித்து மிகவிழிப்பாக இருந்து, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு பதினேழு தினங்கள் முன்பதாகவே அக்குண்டுத் தாக்குதல்பற்றி இலங்கை அரசதரப்பினருக்கு எச்சரித்திருந்தது.

ஆனால், அந்த எச்சரிக்கை புறந்தள்ளப்பட்டுள்ளது. அதுகுறித்து அசமந்தப்போக்கான நிலையில் அரசு இருந்துள்ளது. இலங்கையின் பாதுகாப்புத்துறையினரோ அல்லது புலனாய்வுத்துறையினரோ இந்தியாவின் எச்சரிக்கை குறித்து கவனத்திலெடுக்காதிருந்துள்ளனர்.

இதன்காரணமாக இலங்கையர்கள் குறிப்பாக, கிறிஸ்தவ மக்கள் பெரும் விலை கொடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தனர். அரச உயர்மட்டத்தில்கூட இந்திய புலனாய்வுத்துறையின் எச்சரிக்கை உரியவகையில் கவனத்தில் எடுக்கப்படாததுடன், ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் மட்டத்திலும் இந்தியாவினுடைய எச்சரிக்கைகுறித்து ஆராயப்படவில்லையென்றே அறியமுடிகின்றது.

முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஒரு வேடிக்கையான கருத்தொன்றை தற்போது கூறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இந்தியா விடுத்த எச்சரிக்கை தமக்கு தெரிவிக்கப்பட்டிருந்தால் அத்தாக்குதலை தம்மால் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமென்று அவர் கூறியுள்ளார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வெகுளித்தனமாக பேசுவதில் வல்லவர் என்பதை இலங்கையின் அரசியல் வட்டாரம் நன்கறிந்தே வைத்திருக்கின்றது. இவ்வகையில், ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து கடந்த ஆட்சிக்காலத்தில் அவருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் நாட்டின் தேசியபாதுகாப்பு மற்றும் விடயங்கள் தொடர்பாக எந்தவித புரிந்துணர்வும் இருந்திருக்கவில்லையென்பதையே புலனாக்கியிருக்கின்றது.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு துறைசார்ந்த விடயங்களில் போதியளவு அக்கறை காண்பித்திருக்கவில்லையென்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளை 2009ஆம் ஆண்டு தோற்கடித்த பின்னர், நாட்டில் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் இடமில்லையென்ற வகையிலேயே கடந்த கால ஆட்சியாளர்கள் இருந்துவந்துள்ளனர். இதனையே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவமும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. ஆனால், ஏதோ ஒரு வகையில் ஒரு பயங்கரமான அச்சுறுத்தல் உயிர்த்த ஞாயிறு வேளையில் அரசாங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறியதாக கச்சிதமானமுறையில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் மாத்திரமல்ல. நீர்கொழும்பு, மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலும் ஏக்காலத்தில் உயிர்த்த ஞாயிறுதினத்தில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் முறியடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், பயங்கரவாதமென்பது சர்வதேச ரீதியாக பலத்த அச்சுறுத்தலை விடுத்துவருகின்றதென்பதையே இலங்கையில் மூன்று இடங்களில் ஏககாலத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பயணம் மேற்கொள்வீர்கள் வீட்டிலும், பணியிலும் உங்களுக்கு பொறுப்புகள் கூடும். செயல்பாடுகளில் அவசரமோ, பதற்றமோ வேண்டாம்.

**இடபம்**

கடந்த நாளில் யோசித்ததை செயல்படுத்துவீர்கள். கர்வம் உங்களை வீழ்த்தாமல் கவனமாக இருங்கள். நேற்றைய மனஅழுத்தம் எல்லாமே காணாமல் போகும்.

**மிதுனம்**

பொறுமையற்ற செயல்களால் அவதிப்பட நேரலாம். பிறரை கவிழ்க்க திட்டமிட்டு நீங்கள் கவிழக்கூடும். கடமையை நிறைவேற்ற முடியாமல் உணர்ச்சிகள் குறுக்கிடும்.

**கடகம்**

அழகுணர்ச்சி காரணமாகப் பாராட்டு பெறுவீர்கள். பிள்ளைகளுக்கு புதிய வேலை கிடைப்பதால் மகிழ்வீர்கள். திருமணம் நிச்சயமாகும். மனதில் பரபரப்பு கூடும்.

**சிம்மம்**

எடுத்த விடயத்தை முடிக்கும் ஆற்றல் உண்டாகி மகிழ்வீர்கள். உங்கள் செல்வாக்கை உயர்த்தும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தேவையில்லாத விடயங்களில் தலையிட வேண்டாம்.

**கன்னி**

அதிகாரியின் செயல் நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும். எதிர்ப்புகள் தானாக விலகும். தாயின் நலம் முழுக்க மீளும். உங்களின் சாதனைகளை நீங்களே முயன்று முறியடிப்பீர்கள்.

**துலாம்**

புதிய முயற்சிகளில் உடனடியாக பலன் காண முடியும். தேக்க நிலை மாறும். நடுநிலை காரணமாக நற்பெயர் கிடைக்கும். மற்றவர்களை வழி நடத்தும்படியான செயல் செய்வீர்கள்.

**விருட்சிகம்**

கவலை அளித்த செயல் மாறும். பணியிடத்தில் கவனம் தேவை. உங்களைப் பற்றித் தாயாருக்கு கவலை ஏற்படும். திட்டமிட்டதை சிறப்பாகவும், நேர்த்தியாகவும் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு**

எது பற்றி பயந்தீர்களோ அது விலகி நிம்மதி அளிக்கும். பெருமை உயரும். குடும்பத்தில் இன்பகரமான மாற்றத்தை காண்பீர்கள் உஷ்ணம் தொடர்பான பிரச்னை விலகும். பெரியோர் ஆசி கிட்டும்.

**மகரம்**

கவனத்துடன் செயல்பட்டுப் பிரச்னை அண்டாமல் காப்பீர்கள். உடன் பிறப்பால் தொல்லை ஏற்படலாம். கோபத்தை குறையுங்கள். நெருங்கிய நட்பு வட்டாரத்தின் ஆதரவால் கவலை தீரும்.

**கும்பம்**

எதிலும் தடை தாமதம் வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். கடந்த சில நாளாக இருந்து வந்த வருத்தங்கள் மறையும். பகையை மனதில் சுமந்து நிம்மதியை இழக்க வேண்டாம்.

**மீனம்**

கவனக்குறைவின்றி செயல்பட்டு நன்மை அடைவீர்கள். கடனை அடைப்பதற்கு உண்டான வழி கிடைக்கும். பணியிடத்தில் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவீர்கள்.

# போர் குற்றங்களிலிருந்து படையினரை மீட்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது!

## உறுதியளிக்கின்றார் இராணுவத் தளபதி

**கொழும்பு, மார்ச் 10**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள யுத்த குற்றச்சாட்டுகளில் இருந்து படையினரை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கின்றது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

படைசிப்பாய் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்துகொண்டவேளை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

'எங்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினர் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடையலாம்" என அவர் தெரிவித்துள்ளார்.

'மனித உரிமை பேரவையால் சில விடயங்களை செய்ய முடியும் சில விடயங்களை செய்ய முடியாது என்பது உங்களுக்கு தெரியும்" என தெரிவித்துள்ள சவேந்திர சில்வா, மனிதாபிமான நடவடிக்கைகளின் போது நாங்கள் எவ்வளவு செய்துள்ளோம் என்பது எங்களிற்கு தெரியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதிகள் அப்பாவி பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்திக்கொண்டிருந்தவேளை



நாங்கள் மிகவும் பொறுமையுடன் செயல்பட்டோம். அதன் காரணமாகவே எங்களால் உயிரிழப்புகளை தவிர்க்கமுடிந்தது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்த அரசாங்கம் கொடுத்திருந்த பயங்கரமான அதிர்ச்சியை முஸ்லிம்கள் மறக்கமாட்டார்கள்!

## மன்னிக்கவும் மாட்டர்கள் என்கிறார் ரவூப் ஹக்கீம்



கொழும்பு, மார்ச் 10.

"முஸ்லிம் மக்கள் இந்த அரசாங்கத்தை ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். இந்த அரசாங்கம் கொடுத்த பயங்கரமான அதிர்ச்சியை அவர்கள் மறக்கமாட்டார்கள்" என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் இதனை அவர் தெரிவித்துள்ளார். உடல்களை அடக்கம் செய்யும் விவகாரம் எதிர்கால அரசியலில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் கிட்டத்தட்ட முழு முஸ்லிம் சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது என குறிப்பிட்டுள்ள ஹக்கீம், அவர்களை முஸ்லிம் மக்கள் மன்னிக்க முடியாத அளவிற்கு அரசாங்கம் சமூகத்தை மிகமோசமாக களங்கப்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், "அந்த தீர்மானம் மிகவும் கடுமையான சொற்களுடன் கூடிய உள்ளடக்கத்தை கொண்டுள்ளது.

அரசாங்கம் உடல்களை அடக்கம் செய்யும் தமது கொள்கையை மாத்திரம் கைவிட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

# மானிய ஆணைக்குழு தலைவர் வவுனியா வளாகத்துக்கு விஜயம்

வவுனியா, மார்ச் 10

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் திங்கள் கிழமை மாலை வவுனியா-பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்திலுள்ள முதல்வர் அலுவலகத்துக்கு விஜயம் செய்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின் அங்கிருந்து பம்பைமடுவில் அமைந்துள்ள பீடங்



களுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை வளாகத்தில் துணைவேந்தர், பதிவாளர், வளாக முதல்வர் உட்பட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், பதிவாளர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# ரஞ்சனுடன் செல்பி: அரசு கடும் கண்டனம்!

கொழும்பு, மார்ச் 10

சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுடன் செல்பி எடுத்து, பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமையை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா மீறியுள்ளார் என்று பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா நேற்று முன்தினம் அங்குணபொலபெலச சிறைச்சாலைக்கு சென்று, ரஞ்சன் ராமநாயக்க எம்.பியை சந்தித்துப் பேசினார். இதன்போது, அவருடன் செல்பியும் எடுத்துக் கொண்டார். அதை தனது பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

சிறைச்சாலைகள் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ஹர்ஷன ராஜகருணா தனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறியுள்ளதாகவும், இது குறித்து சபாநாயகரிடம் பாராளுமன்றத்தில் முறையிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெருந்தோட்டங்களை பொறுப்பேற்க தயார்!

## கம்பனிகளுக்கு அரசு இறுதி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 10

**மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் முதல் நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்க மறுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகளை அரசாங்கம் மீளப் பொறுப்பேற்கும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நேற்று அறிவித்தார்.**

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபை ஊடாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு தொழில் அமைச்சர் என்ற வகையில் நான் அனுமதி வழங்கியுள்ளேன். வர்த்தமானி ஓரிரு நாட்களில் வெளிவரும்.

கூட்டு ஒப்பந்தம் ஊடாக சம்பள பிரச்னைக்கு தீர்வு காணவே முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அடிப்படை சம்பளத்தை 700 ரூபாவில் இருந்து அதிகரிப்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் இழுத்தடிப்பு தொடர்ந்தது. இதனையடுத்தே இப்பிரச்சினையை சம்பள நிர்ணய சபைக்கு கொண்டுவரப்பட்டது.

ஒரு சில நிறுவனங்களே ஆயிரம் ரூபாவை வழங்க மறுக்கின்றன. அவ்வாறான நிறுவனங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும். இது தொடர்பில் கம்பனிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது" -என்றும் தொழில் அமைச்சர் கூறினார்.



# சுவிஸ் தூதரக அதிகாரிக்கு எதிராக குற்றப் பத்திரிகை

கொழும்பு, மார்ச் 10

போலியானமுறைப்பாடொன்றைப் பதிவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரிக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நபர்களினால் தான் கடத்தப்பட்டு பாலியல் துன்பறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார் என, கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி ஒருவர், கடந்த 2019 ஆம் ஆண்டில் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தார்.

எனினும், அந்த முறைப்பாடு போலியானது என குறிப்பிட்டு, சட்டமா அதிபரினால் குறித்த பெண்ணுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபரினால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பிரதிவாதியான குறித்த பெண்ணை, முன்பிணையில் செல்வதற்கு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் குறித்த வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 04ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் போக்குவரத்துப் பிரிவை நவீனப்படுத்துவதற்கு அங்கீகாரம்

கொழும்பு, மார்ச் 10

பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் புனரமைப்புக்கு முன்னுரிமை அளித்து, பொலிஸ்துறையின் ஒட்டுமொத்த நவீனமயமாக்கலைக் கண்காணிக்கவும் செயல்படுத்தவும் ஒரு திட்டத்தை வடிவமைக்க ஒரு வழிநடத்தல் குழுவை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

குறிப்பாக, நகர்ப்புறங்களில் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க டிஜிற்றல் மயமாக்கல் தீர்வுகளைப் பயன்படுத்தி பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பணிகளை நெறிப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதனுடன் தொடர்புடைய திட்டத்தை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்தார்.

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-09 கண்டி வீதி 521 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் P.காசிப்பிள்ளை என்னும் பெயரில் மாநகர சபை ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை இல 9/8 மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா யோகேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 22.02.2018 இல் திகதியிடப்பட்ட 500 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் தான் குறித்த ஆதனத்தை கடந்த 30 வருடங்களாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் எனவே, ஆட்சியுரிமை சட்டத்தின் பிரிவு 03இன் கீழ் ஆட்சியுரிமை பெற்றுவிட்டதாகவும் வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை J/94 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "பிரையன் தாழ்வும் மதிப்பன் குளத்து வளவும் மேற்குப்புலமும் மறு பிரிவுகளும்" 'நில.பர 3 குளி 13.07. இது நில அளவையாளர் ஏ.கந்தசாமி 2017.12.27ஆம் திகதி அளந்து தயாரித்த 5013ஆம் இலக்கப்படத்தில் துண்டு 2 ஆக காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு மூன்று குளி பதின்மூன்று தசம் பூச்சியம் ஏழுக்குரிய எல்லை.

கிழக்கு:- வேல்முருகுவின் ஆதனம்.

வடக்கு :- துண்டு -1

மேற்கு :- மகாதேவா விமலராணி சின்னத்துரை பெண் அருளம்மா கதிர்காமநாதன் கமலாம்பாள் ஆகியோரின் உரித்தாளர்களின் ஆதனம்.

தெற்கு :- வெள்ளவாய்க்கால் இதடங்கலும்

தற்போது இவ்வாதனம் செல்லையா யோகேஸ்வரன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செல்லையா யோகேஸ்வரன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகர சபை.**

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் ஒருபோதும் இருந்திராது இந்தியா

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 10

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருந்திருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இந்தியா உள்ளது எனவும், தாக்குதலை 'றோ' அமைப்பே வழிநடத்தியது எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்னவென்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில்அவர்மேலும் கூறியவை வருமாறு:

2019 ஏப்ரல் முதல் வாரத்தில் இந்தியவால் புலனாய்வுத் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. கடைசி இரு நாட்களில்கூட எச்சரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயல்பட்டிருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யமுடியாமல் போனதையிட்டுதான் நாம் கவலையடைகின்றோம்.

தாக்குதலின் பின்னணியில் இந்தியா இருந்துள்ளது என்பதற்கான தகவல் எதுவும் இல்லை. புலனாய்வு அமைப்புகளும் அது தொடர்பில்தகவல்வழங்கவில்லை.

அதேவேளை சாரா என்பது யாரென தெரியாது. அவர் ஊடாக தகவல் சென்றிருக்ககூடும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர் மூன்றாம் தரப்பொன்றுக்குகூறி அதன் ஊடாக தகவல் சென்றிருக்ககூடும். சாரா 'றோ' உளவாளியா என்பது குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவர் ஊடாகவே தகவல் சென்றிருக்ககூடும் என நம்பப்படுகின்றது. நேரடியாக சென்றதா அல்லது மூன்றாம் தரப்பு ஊடாக சென்றதா என்பது தெரியாது-என்றார்.



# வடக்கின் மூன்று தீவுகளை அரசு இந்தியாவுக்கு வழங்காது!

## சீனாவுக்கே என்கிறார் வீரவன்ஸ



**கொழும்பு, மார்ச் 10**

**வடக்கு மாகாணத்திலுள்ள நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளையும் இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு ஒருபோதும் தயாரில்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

மேலும், அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதியின் பிரகாரம் குறித்த மூன்று தீவுகளிலும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் சீன நிறுவனத்துக்கே இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய அமைச்சரவையின் அனுமதியையும் மீறி மூன்று தீவுகளுக்கான திட்டங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோருவது சிறுபிள்ளைத்தனமானது என அமைச்சர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வெளிநாட்டுத் திட்டங்களுக்கான கோரிக்கையை இலங்கையிடம் விடுக்க முடியும். ஆனால், அது தொடர்பில் அமைச்சரவைதான் இறுதி முடிவெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது!

கொழும்பு, மார்ச் 10

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பு செய்யப்படாமையால் சமையல் எரிவாயு நிறுவனங்கள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக பொருளாதார அமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சரவைக்கு அறியப்படுத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உலக சந்தையில் சமையல் எரிவாயுவுக்கான விலை தொடர்பிலும் அமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தியுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், சமையல் எரிவாயுவின் விலை எந்தவொரு காரணத்துக்காகவும் அதிகரிப்பு செய்யப்படமாட்டாது என ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# மொட்டு கட்சியிடம் அடிபணிந்து மன்னிப்பு கேட்க விமல் மறுப்பு!

கொழும்பு, மார்ச் 10

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து பகிரங்கமாக மன்னிப்பு கோருவதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்ச்சியாக மறுப்பு தெரிவித்து வருகின்றார். இதனால் மொட்டுக்கட்சி காரர்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

'சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அவ்விடத்துக்கு கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என விமல் வீரவன்ஸ வெளியிட்டிருந்த கருத்தானது அரச கூட்டணிக்குள் பெரும் மோதலை உருவாக்கியது.

விமல் வீரவன்ஸவின் கருத்து தவறு, அதனை அவர் மீளப்பெற வேண்டும் என்பதுடன், அதற்காக மன்னிப்பும்கோர வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தியிருந்தனர்.

விமல் அறிவிப்பு விடுத்து ஒரு மாதம் கடக்கவுள்ள நிலையிலும் அவர் இன்னும் மன்னிப்பு கோரவில்லை. இதனால் மொட்டுக் கட்சிக்காரர்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

# தலைமைப் பொறுப்பை கோட்டாவுக்கு வழங்குக!

## வாசுதேவவும் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 10

சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசியல் கூட்டணியின் தலைமைப்பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அப்பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ வெளியிட்டிருந்த கருத்து தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் விமலுக்கும், மொட்டு கட்சிக்காரர்களுக்குமிடையில் கடும் மோதலும் ஏற்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே தலைமைத்துவம் குறித்து அமைச்சர் வாசுவும் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது:-

ஜனாதிபதி கோட்டாபய அரசியல் சார்ந்த பொறுப்பொன்றையும் வகிக்கவேண்டும் என்பதே எமது கருத்து. அவரை நிர்வாக அதிகாரியாக மட்டும் ஒதுக்கிவைத்துவிடமுடியாது. அவ்வாறு நடந்தால் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கான அரசியல் சக்தி அவருக்கு கிடைக்காமல் போகக்கூடும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே எமது தேசியத் தலைவர். அவரை விடவும் எமக்கு தலைவரொருவர் கிடையாது. எனினும், கட்சித் தலைமைப்பதவியை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கலாம். எமது கூட்டணியின் தலைமைப் பதவியை யாவது அவருக்கு வழங்க முடியும்-என்றார்.



# அறிக்கை குறித்து இன்று பாராளுமன்றத்தில் விவாதம்

கொழும்பு, மார்ச் 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பானஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பற்றிய விவாதத்தை இன்று புதன்கிழமை ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, இன்று ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை சபை ஒத்திவைப்பு பிரேரணையாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

# காரைநகர் இ.போ.ச. சாலை பஸ் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

காரைநகர் இ.போ.ச.சாலை பஸ் சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவில்லை. காரைநகர் சாலையில் பணியாற்றும் சாரதிகள் மூவர், நடத்துநர் கள் மூவர் மற்றும் காப்பாளர்கள் இருவர் என எட்டு பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன் தினம் பி.சி.ஆர்.பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

காரைநகர் சாலையில் பணியாற்றுபவர்களில் 90பேரின் மாதிரிகள் பெறப்பட்டு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்த 8பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. அதனால் காரைநகர் சாலையிலிருந்து சேவையில் ஈடுபடும் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று இடம்பெறவில்லை.

இதேவேளை, காரைநகர் சாலையில் பணியாற்றும் சாரதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ள நிலையில், அவர் நேற்று முன் தினம் இடம்பெற்ற அலுவலகக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார்.

இ.போ.சவின் வடக்கு பிராந்திய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சார்ந்தோரால் நடத்தப்பட்ட இந்த கூட்டம், செயற்பாட்டு முகாமையாளரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் மேலும் சில உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.




# காரைநகர் பஸ் சேவையை நாங்கள் முடக்கவேயில்லை

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம்-காரைநகர் அரசபஸ்சேவை நடவடிக்கைகள் நடைபெறாத நிலையில் அந்த சேவைகளை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தவில்லை என்று பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் அரச பஸ் சேவையின் சாரதிகள் மூவர், நடத்துநர்கள் மூவர், நேரக்காப்பாளார்கள் இருவர் என எண்மர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று காரைநகர் அரச பஸ் சேவைக்குச் சொந்தமான பஸ்கள் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனை கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த பஸ் சேவையை இடைநிறுத்துமாறு எந்தவித அறிவித்தலையும் நாங்கள் விடுக்கவில்லை. பஸ்களையும் பஸ் தரிப்பிடத்தையும் சுத்திகரிப்புக்கு உட்படுத்திய பின்னர் தொடர்ந்தும் சேவையை முன்னெடுப்பதில் எந்தத் தடையும் இல்லை-என்றார்.

# ஐ.நாவிடம் நீதி கேட்டு அரசினது பொறுமையை சோதிக்கின்றனர்!

## அமைச்சர் கெஹலிய விசனம்



கொழும்பு, மார்ச் 10

**அரசுக்கு எதிராகவும், அரசின் பொறுமையைச் சோதிக்கும் வகையிலும் ஐ.நாவிடம் நீதி கோரி வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் தற்போது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஐ.நாவோ அல்லது சர்வதேச நாடுகளோ தமிழர்களுக்கு ஒரு போதும் தீர்வு வழங்காது. எனவே, தேவையற்ற போராட்டங்களை தமிழ் மக்கள் உடனே நிறுத்த வேண்டும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போரின்போது தமிழ் மக்களுக்கு அநீதிகள் இடம்பெற்றிருந்தால் அதற்கான தீர்வுகளை அரசு தான் வழங்கும். அதை விடுத்து நாட்டின் சட்ட திட்டங்களை மீறி ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

தமிழ் மக்களின் இந்தப் போராட்டங்களின் பின்னணியில் தமிழ் அரசியல்வாதிகளும், புலம்பெயர் அமைப்பினரும் செயல்படுகின்றனர்.

இரு தரப்பினரும் தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழ் மக்களைப் பகடைக்காய்களாக்குகின்றனர். அரசின் பொறுமையைச்சோதிக்கும்வகையில்தேவையற்ற போராட்டங்களை முன்னெடுப்பதை தமிழ் மக்கள் உடன் நிறுத்த வேண்டும்-என்றார்.



# மண்ணெண்ணெய் மானியத்தை தடைகளின்றி வழங்கவேண்டும்

## அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை

கொழும்பு, மார்ச் 10

மண்ணெண்ணெய் மானியத்தை எவ்வித தடைகளுமின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

2021 பெப்ரவரி 05ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கமைய, கச்சா எண்ணெய்க்கான துறைமுக மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரியை திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை துணைக்குழு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் முதல் முறையாக நேற்று முன்தினம் கூடியது.

இதன்போது, மண்ணெண்ணெய்க்கான மானியங்கள் எவ்வித முறைகேடுகளும் இன்றி நேரடியாக விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு குறித்து ஆராயுமாறும் அது தொடர்பான நடைமுறைகளை வகுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

அத்துடன் எண்ணெய் கூட்டுத்தாபனத்தினால் அரச வங்கிகளிடமிருந்து டொலர்களில் கடன் பெறுவதற்கு பதிலாக, ரூபாவில் கடன் பெறுவதற்கான வாய்ப்பு குறித்து கலந்துரையாடுமாறு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமருக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சரவை துணைக்குழு உறுப்பினர்களும் அமைச்சர்களுமான உதய கம்மன்பில, டலஸ் அழகப்பெரும, டக்ளஸ் தேவானந்தா, பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட துறைசார்ந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# காணாமல்போனவர்கள் விடுதலைப் புலிகள்தான்!

## பொதுமக்கள் அல்ல என்கிறார் வீரசேகர

கொழும்பு, மார்ச் 10

போரின்போது தமிழீழ விடுதலைப்புலிகளும், அவர்களின் நெருங்கிய சகாக்களுமே காணாமல்போயுள்ளனர். தமிழ் மக்கள் எவரும் காணாமல்போகவில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள நாடுகள் இவற்றைக் கருத்தில்கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தோல்வியுற்றாலும் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிட விடப்போவதில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை மோசடி: மூன்று பேர் கைது

கொழும்பு, மார்ச் 10

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தரப்பரீட்சை மோசடி தொடர்பில் இதுவரை மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

இந்தநிலையில் தனது உறவினருக்காக கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய 21 வயது இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் கலுவில பகுதியில் இந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

சந்தேக நபர் திஸ்ஸமஹாராம பகுதியை சேர்ந்தவர். அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வீஸா இல்லாமல் தங்கியுள்ளோரை தீவிரமாகத் தேடுகின்றது பொலிஸ்

கொழும்பு, மார்ச் 10

வீஸா இல்லாமல் நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டினரை தொடர்ந்து தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சில வெளிநாட்டினரால் இணையத்தில் ஏராளமான நிதி மோசடிகள் பதிவாகியுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் தொடர்வதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதையடுத்தே சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை கைது செய்ய பொலிஸ் சிறப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, கொள்ளுப்பிட்டி பகுதியில் 08 தாய்லாந்து பிரஜைகள் கைது செய்யப்பட்டதாக அஜித் ரோஹண கூறினார்.

இதேவேளை, வீஸா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த மூன்று நைஜீரியர்கள் உட்பட 8 வெளிநாட்டவர்கள் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணின் தலையை துண்டிக்கும் அளவுக்கு இன்றைய ஆட்சியில் வன்முறை அதிகரிப்பு

## சுட்டிக்காட்டுகிறார் ருவான் விஜயவர்த்தன

கொழும்பு, மார்ச் 10

நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதுடன், பெண்ணின் தலையை துண்டிக்கும் அளவுக்கு அது தீவிரமடைந்துள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற மகளிர்தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையை பொறுத்தமட்டில் முதல் பெண் பிரதமரை உருவாக்கியமை தொடர்பில் பெருமை கொள்வதுடன், பெண் ஜனாதிபதியொருவரும் பதவி வகித்துள்ளார் என்று பெருமிதம் கொள்ள முடியும். இவ்வாறு ஆரம்பத்தில் பெண்களுக்கு பல முதல்நிலை பொறுப்புகளை வழங்கிய எமது நாட்டில், இன்று பெண்களின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது.

பெண்கள் தங்களது குடும்பத்துக்கு மட்டுமன்றின் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். பணிப்பெண்களான வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள், தேசிய வருமானத்துக்கு பெரும் உந்து சக்தியாக செயற்பட்டு வருகின்றார்கள்.

எனினும், கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்களது நிலைமை பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளது. இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மத்தியிலே அவர்கள் மேலும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதற்கமைய பெண் பிரதி பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நபர்களிருக்கும் இந்த நாட்டில், தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் பெண் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. வீட்டை விட்டு வெளியேறும் பெண்களின் கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலிகளுக்கு கூட பாதுகாப்பு இல்லை-என்றார்.

# வாக்குறுதிகளில் இருந்து விலகியதே இந்த இக்கட்டு நிலைக்கு காரணம்!

## சுட்டிக்காட்டுகிறார் ஹர்ச டி சில்வா



கொழும்பு, மார்ச் 10

நீதியை நிலைநாட்ட முன்நிற்பதாக சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகியமையே இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை கொண்டு வரப்படுவதற்கு காரணம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இலங்கைக்கு எதிராக இந்த பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருக்காது.

எமது கட்சி, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணையை தோற்கடிக்க பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

ஜெனிவா தீர்மானம் நாட்டில் தற்போதய ஜனநாயக விரோத நடவடிக்கைகள், இராணுவ மயமாக்கல் மற்றும் மனித உரிமை மீறல் உள்ளிட்ட சம்பவங்களை மேற்கோளிட்டுள்ளது. இருப்பினும் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடனான மோதலை மட்டுமே அனைத்து அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டுகிறது-என்றார்.

# தி.மு.கவின் கூட்டணிக் கணக்கில் கலங்கிய கம்யூனிஸ்ட் கட்சிகள்!



ஆ. விஜயானந்த்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 180 தொகுதிகளுக்கு மேல் தி.மு.க போட்டியிட உள்ளது. 'கூட்டணிக் கட்சிகளுக்குத் தொகுதிகளை ஒதுக்கிய விவகாரத்தில்மு.க.ஸ்டாலின்வெற்றி பெற்றுவிட்டார். நாங்கள் தோற்றுவிட்டோம்' என ஆதங்கப்படுகின்றனர் கம்யூனிஸ்ட்கள்.

**என்ன நடந்தது?**

சட்டமன்றத் தேர்தலுக்கு ஒரு சில வாரங்களே இருப்பதால், புதிய புதிய அறிவிப்புகளால் தி.மு.கவும் அ.தி.மு.கவும் வாக்காளர்களைத் திணறடித்து வருகின்றன. 'இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1000' என திருச்சி மாநாட்டில் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பு பரபரப்பானது. இதையடுத்து, '1,500 ரூபாயோடு ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள்' என்ற அறிவிப்பை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார். 'நாங்கள் அறிவிக்க இருந்த தகவல் கசிந்துவிட்டதால், தி.மு.க வெளியிட்டுவிட்டது' என அ.தி.மு.க தரப்பில் இருந்து விளக்கமும் கொடுக்கப்பட்டது.

புதிய அறிவிப்புகள் ஒருபுறம் இருந்தாலும், கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்க வேண்டிய தொகுதிகளில் தி.மு.க. கறார் காட்டியதை காங்கிரஸ், மார்க்சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளால் இன்றளவும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ம.தி.மு.க, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கட்சிகளோடு முதலில் இழுபறி நீடித்தது. பின்னர், ம.தி.மு.க ஒப்புக் கொண்டுவிட்டதால் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தி.மு.க தரப்பிடம் கூடுதல் தொகுதிகளை வாங்க முற்பட்டனர். ஒருகட்டத்தில் 25 தொகுதிகளுக்கு காங்கிரஸ் இசைவு தெரிவித்துவிட்டது. கூட்டணிக் கட்சிகளிலேயே மார்க்சிஸ்ட் கட்சியே கடைசி வரையில் சம்மதம் தெரிவிக்காமல், '8 தொகுதிகள் வரையில் பெற்றே தீருவது' என உறுதியாக இருந்தது.

'வேட்பாளர்களை அறிவிக்கவிருக்கிறோம். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது' என தி.மு.க. தரப்பில் உறுதி காட்டியதால், வேறு வழியின்றி இறுதியாக மார்க்சிஸ்ட் கட்சியும் 6 இடங்களைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டுவிட்டது.

**பேச்சின்போது என்ன நடந்தது?**

"கூட்டணிக் கட்சிகளை எத்தனை தொகுதிகளுக்குள் இறுதி செய்ய வேண்டும் என்பதை தி.மு.க. தலைமை முன்கூட்டியே முடிவு செய்துவிட்டது. ஐபேக் நிறுவனம் உட்பட பல்வேறு தரப்பில் இருந்து அவர்களுக்குத் தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே தொகுதிகளை வழங்கியுள்ளனர். கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் வி.சி.க, ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் இல்லை. 'அவர்களுக்கு குறைவான எண்ணிக்கையில் இடங்களைக் கொடுப்பது' என்ற அடிப்படையில் செயல்பட்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கையொப்பம் போட்டவுடன், எங்களுக்கான பிடி நழுவிவிட்டது" என ஆதங்கத்தோடு பி.பி.ஸி. தமிழிடம் விவரித்தார் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகி ஒருவர்.

**15 ஆக குறைந்த 21**

பெயர் குறிப்பிட விரும்பாமல் தொடர்ந்து பேசியவர், "இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் எங்களோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். 'எதுவாக இருந்தாலும் இருவரும் அமர்ந்து பேசி முடிவு செய்வோம்' எனக் கூறிவிட்டு முதல் ஆளாகச் சென்று ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டுவிட்டனர். இதில் எங்களுக்கு மனவருத்தம்தான். தி.மு.க. தரப்பிடம், எங்களுக்கு வெற்றிவாய்ப்புள்ள 21 தொகுதிகளைக் கண்டறிந்து அதில் 15 தொகுதிகளுக்கான பட்டியலைக் கொடுத்தோம். அவை ஏற்கெனவே நாங்கள் வென்ற தொகுதிகள்தான். அந்தப் பட்டியலில் திண்டுக்கல், மதுரை, திருப்பூர், கோவை, நாகர்கோவில், நாகப்பட்டினம், பெரம்பூர் உள்ளிட்ட தொகுதிகளும் அடக்கம். தி.மு.க தரப்பில் நாங்கள் கொடுத்த பட்டியலை படித்துப் பார்த்தார்களா எனத் தெரியவில்லை. அவர்களிடம் கூடுதல் இடங்களைப் பெறுவதற்காக நாங்கள் எந்த லாபியும் செய்யவில்லை. 'பா.ஜ.க, அ.தி.மு.கவை தோற்கடிப்பது' என முடிவெடுத்த பிறகு கூட்டணி தொடர்பாக நாங்கள் வேறு நிலைப்பாட்டை எடுக்க முடியாது. தி.மு.கவும், 'எப்படியும் மார்க்சிஸ்ட் வெளியே போகாது' என உறுதியாக நினைத்துவிட்டனர்.

ஒருகட்டத்தில் காங்கிரஸ் கட்சியோடு இழுபறியாகும் என நினைத்தோம். ஓர் எம்.பி தொகுதிக்கு 3 சட்டமன்றத் தொகுதிகள் என்பதால் காங்கிரஸ் கட்சிக்கு 8 எம்.பிக்கள் என்ற அடிப்படையில் 24 தொகுதிகள் என முடிவானது. இறுதியில் டில்லியில் பேசி, ஒரு தொகுதியைக் கூடுதலாகப் பெற்று 25 தொகுதிகளை அவர்கள் வாங்கிவிட்டனர். இதற்காக அகில இந்திய தலைவர்கள் அவர்களுக்கு உதவி செய்தனர். எங்களுக்கு அது போன்ற சூழல்கள் அமையவில்லை" என்கிறார் வேதனைக் குரலில்.

**பா.ஜ.க. என்ன செய்யும்?**

தொடர்ந்து பேசுகையில், "தி.மு.க நிர்வாகிகள் எங்களிடம் பேசுகையில், 'இந்த ஒருமுறை எங்களை விட்டுவிடுங்கள், 180 இடங்களில் நாங்கள் போட்டியிட்டால் 150 தொகுதிகளில் உறுதியாக வெற்றி பெற்று ஆட்சியமைப்போம். எங்களுக்கு அந்த எண்ணிக்கை தேவையாக இருக்கிறது. காரணம், பா.ஜ.க, அ.தி.மு.க. கூட்டணியின் வலுவைப் பார்த்தால் தேர்தலுக்குப் பிறகு எங்கள் கட்சியில் இருந்து ஆள்களை எடுப்பதற்கும் அவர்கள் முயற்சி செய்வார்கள்' என்றனர். கூட்டணிக் கட்சிகளுக்கு மொத்தமாக 54 இடங்கள்தான் என்பதில் ஸ்டாலின் உறுதியாக இருந்தார். நாங்கள் இரண்டு முறை பேச்சுக்களில் பங்கு பெற்றோம். கூட்டணிக் கட்சிகளை கருணாநிதி கையாண்ட விதத்துக்கும் மு.க.ஸ்டாலின் எங்களைக் கையாண்ட விதத்துக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. அவர் கூட்டல், கழித்தல் கணக்குகளை வைத்துக் கொண்டு பேச மாட்டார். கட்சிகளின் தரத்தை மட்டுமே பார்ப்பார். அந்தந்த சூழலில் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது கருணாநிதிக்குத் தெரியும்.

**மக்கள் நலக் கூட்டணிக் கணக்கு**

அவரையும் தற்போதுள்ள தலைமையையும் ஒப்பிட முடியாது. நாங்களும் ஒருகட்டத்தில், "8 இடங்களைக் கொடுத்தாலாவது கையொப்பம் போடலாம்" என்றோம். காங்கிரஸை போல ஒரு தொகுதி கூடுதலாகக் கிடைக்கலாம் எனவும் நம்பினோம். அவர்கள் தங்களுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்கள். இந்தப் பேச்சில், அவர்கள் முக்கியமான கணக்கு ஒன்றையும் முன்வைத்தனர். '2016 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நலக் கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகளில் மார்க்சிஸ்ட் கட்சி மட்டுமே குறைவான வாக்கு சதவிகிதத்தைப் பெற்றுள்ளது. அந்தத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் 0.9 சதவிகிதமும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 0.8 சதவிகிதமும் மார்க்சிஸ்ட் 0.7 சதவிகிதமும் வாக்குகளைப் பெற்றிருந்தன. உங்களுக்கு ஒரு சீட் கூடுதலாகக் கொடுத்தால் அவர்களும் கேட்பார்கள்' என்ற காரணத்தை முன்வைத்தனர். இதனை சுட்டிக் காட்டிப் பேசியபோது எங்களால் பதில் அளிக்க முடியவில்லை" என்கிறார் அவர்.

இதையடுத்து பிபிசி தமிழிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய நிர்வாகி ஒருவர், "வி.சி.கவுக்கு வட மாவட்டங்களில் சில தொகுதிகளில் செல்வாக்கு உள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 6 தொகுதிகளில் வலுவாக உள்ளது. 34 மாவட்டங்களிலும் தேர்தல் வேலை செய்யக் கூடிய களப்பணியாளர்களைக் கொண்டது மார்க்சிஸ்ட் மட்டும்தான் என்பது தி.மு.கவுக்கும் தெரியும். ஆண்டு முழுக்க மக்கள் பிரச்னைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறோம். ஓர் எம்.பி தொகுதிக்கு 3 சீட் என்றால், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 20 தொகுதிகளில்தானே தி.மு.க. வென்றது. இதனையும் லொஜிக் அடிப்படையில் பார்க்கலாம்தானே..







**வேறு வழியில்லை**

ஒருகட்டத்தில் எங்களால் போராடிப் பெற முடியாது எனத் தெரிந்ததுவிட்டது. மேலும், தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதால் வி.சி.க, ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பார்வையும் எங்களுக்கு எதிராகப் போய்விடும் என அச்சப்பட்டோம். அதிலும், இரண்டு முறை தி.மு.க ஆட்சியில் இல்லை. பெரும்பாலான இடங்களில் நிற்க வேண்டும் என அவர்கள் நினைப்பதில் தவறில்லை. அவர்கள் கொடுத்ததை மற்றவர்களும் வாங்கிக் கொண்ட பிறகு மனவருத்தத்தோடு ஏற்றுக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை" என்றார் ஆதங்கத்துடன்.

**குறைத்து மதிப்பிடவில்லை**

சி.பி.எம் நிர்வாகிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் வீரபாண்டியனிடம் பேசினோம். "தொகுதிப் பங்கீடு பேச்சில், 'இரண்டு பேரும் ஒன்றாகச் சென்று பேசுவோம்' என நாங்கள் ஒருபோதும் சொல்லவில்லை. 'நாங்கள் பேசினாலும் சொல்கிறோம், நீங்கள் பேசினாலும் சொல்லுங்கள்' என்றோம்.

எத்தனை தொகுதிகள், எந்தெந்த இடங்கள் என்பதைப் பற்றியும் அவர்களிடம் நாங்கள் விவாதிக்கவில்லை.

நன்றி: பி.பி.ஸி.தமிழ்

ஈழநாடு








# ஜெனிவா விவாதங்கள் : இராஜதந்திர நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள இலங்கை?

**வி. சிவலிங்கம்**

தற்போது ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கை தொடர்பாக இடம் பெற்றுவரும் விவாதங்கள் இலங்கை அரசின் பலவீனமான அணுகுமுறைகளை அம்பலப்படுத்தி வருகிறது.

இவ் வாதங்கள் தொடர்பாக வெளிவரும் ஊடக செய்திகளை அவதானிக்கையில் இலங்கை அரசின் ஜெனிவா நடத்தைகள் சிரிப்புக்குரியனவாக மாறி வருவதாகத் தெரிவிக்கின்றன. குறிப்பாக அரச நிர்வாகத்தின் வெவ்வேறு பிரிவுகள் ஒன்றிற்கொன்று தொடர்பற்றுச் செயல்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதற்கான பிரதான காரணம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுத் தலைவரின் அறிக்கையை ஒரு புறத்தில் முழுமையாக நிராகரிப்பதாக உள் நாட்டில் தெரிவிக்கும் அதேவேளையில் இலங்கையின் ஜெனிவா நிரந்தரப் பிரதிநிதி அத்தீர்மானத்தின் சில பகுதிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துகள் உண்மையில் அரசு இந்த அறிக்கையை முற்றாக நிராகரித்துள்ளதாக மக்களுக்கு உண்மையை மறைப்பதாக கூறப்படுகிறது.

தற்போது இப்பிரச்சனையில் ஈடுபட்டுள்ள பிரதான நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகள் தாம் தயாரித்துள்ள 'பூச்சிய அறிக்கை'இல் சில சொற் பதங்களை மாற்றச் சம்மதமளித்துள்ளன. ஆனால் இம் மாற்றங்களை அவதானிக்கையில் இவை மேலும் கடுமையான பல பிரச்னைகளைத் தோற்றுவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை தொடர்பாக நடைபெற்ற உத்தியோகப் பற்றற்ற விவாதங்களில் இவை பேசப்பட்டன.

உதாரணமாக, ஆரம்ப ஆணைக்குழு தீர்மானங்களில் 'தேசிய நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளைப் பேணுதல்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அவை மேலும் விரிவாக்கப்பட்டு,

'.....மனித உரிமைச் சபையின் 11/1 தீர்மானத்தின் அடிப்படையில் சபை இலங்கை நிரந்தர அரசியல் தீர்வை எட்டும் அடிப்படையில் நீடித்த சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்கில் பரந்த அடிப்படையிலான பேச்சுக்களில் ஈடுபடப்போவதாகவும், அவை நாட்டின் சகல இனக் குழுமங்களின் உரிமைகளை மதித்து மேற்கொள்ளப்படும் என 2009 ஆம் ஆண்டு மே 26ஆம் திகதி அன்றைய ஜனாதிபதிக்கும், அப்போதைய ஐ. நா. செயலாளர்நாயகம்பான்கிமூன்ஆகியோருக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் அவை சர்வதேச மனிதநேய சட்டங்கள், மனித உரிமைச் சட்டங்களின்பிரகாரம் பொறுப்புக்கூறலுக்கு முக்கியத்துவம்வழங்கி செயல்படுத்தப்படும்' என வாசகம் மாற்றப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் ஆகியோர் மத்தியிலே பொறுப்புக்கூறல், மனித உரிமை மீறல்கள், மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்து விசாரணை செய்வதாக ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதை மீளவும் நினைவூட்டப்பட்டுள்ளது.

அதைப் போலவே பயங்கரவாத தடுப்பு தொடர்பாக கூறப்படும் பகுதிகளில் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

'.....பயங்கரவாதம் தொடர்பாக பின்பற்றப்படும் அணுகுமுறைகள், வன்முறையை ஊக்குவிக்கும் தீவிரவாத செயல்கள், அதற்கான வெவ்வேறு செயற்பாடுகள் போன்றனவற்றை எத் தரப்பினர் மேற்கொண்டாலும் அவை முழுமையாகக் கண்டிக்கப்படுவதோடு, அதனை யார், எந்த நோக்கங்களுக்காக குறிப்பாக நிதித் தேவைக்காக அல்லது பொருள் ஆதாயத்திற்காக அல்லது பயங்கரவாதத்தின் மூலம் அரசியல் ஆதரவைப் பெறுவதற்காக மேற்கொண்டாலும் அவை சர்வதேச சட்டங்களின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணங்கள் அல்ல' .....

இவ்வாறு அந்த அறிக்கையில் சுமார் 24 மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை மேலும் பலமுள்ளதாக மாற்றம் பெற்றிருக்கிறது. ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு புதிதாக எதனையும் மேற்கொள்ளாது மகிந்த - பான் கி மூன் ஆகியோருக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த வாசகங்களையே மூலமாகப் பயன்படுத்தியுள்ளது.

இவ்வாறான மாற்றங்களின் பின்னணியில் இதனை எதிர்ப்பதாயின் பொதுவாகவே அரசின் இரண்டாம், மூன்றாம் கட்ட அதிகாரிகளே அவற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தும்படி கோருவார்கள். ஆனால் இம் முறை எதிர்பாராத வகையில் ஐ.நா. மனித உரிமைச் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சி. ஏ. சந்திரபிரேமா தாமே முன்வந்து மாற்றங்களைக் கோரியுள்ளார்.

முக்கிய இணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்பது மனித உரிமை என்ற பெயரில் அரசியல் அறிக்கையாக உள்ளது எனவும், அவை இலங்கையை நியாயமற்ற விதத்தில் அணுகுவதாகவும் குற்றம் சாட்டினார். அவர் தமது உரையின்போது மிகவும் அமைதியற்றுக் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வாசகர்களின் நன்மை கருதி அந்த அறிக்கையின் பிரதான பகுதிகளில் ஒன்றான 'செயல்பாட்டு பகுதி 7' கீழே தரப்படுகிறது.

'...கடந்த வருடம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் மாறிவரும் மனித உரிமை மீறல் நிலமைகளை அதாவது அதற்கான ஆபத்துகள் குறித்த எச்சரிக்கை சமிக்ஞைகளைத் தருகிறது. குறிப்பாக அதிகரித்துச் செல்லும் சிவிலியன் நிர்வாகங்களில் இராணுவ மயமாக்கல், சுயாதீனமான நீதித்துறையின் செயல்பாடுகளிலும், மனித உரிமையைப் பேணவேண்டிய நிர்வாகங்களில் தலையீடுகள், சட்டத்தினைப் புறக்கணிக்கும் செயல்பாடுகளின் அதிகரிப்பு, பொறுப்புக் கூறும் நிலைமைகளில் அரசியல் தலையீடு, மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகளில் தலையீடு, சுயாதீனமான மத உரிமைகளைத் தடுக்கும் வகையில் செயற்படுதல், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் மிகவும் அதிகரித்த அளவில் ஒதுக்கப்படுதல், அம் மக்கள் மீதான அதிகரித்த கண்காணிப்பு, தலையீடுகள், கட்டுப்பாடுகள், ஊடக சுதந்திர மறுப்பு, சிவில் சமூக செயற்பாடுகள் மீதான கண்காணிப்பு, கட்டுப்பாடுகள், சுயாதீனமான செயற்பாடுகளுக்கான இடைவெளி சுருங்கிச் செல்லுதல், இறந்தவர்களை நினைவு கொள்ளும் செயற்பாடுகளில் தடைகள், இறந்தவர்களின் நினைவிடங்களின் அடையாளங்களை அழித்தல், சித்திரவதைகள், மனித விழுமியங்களை கீழ்மைப்படுத்தும் வழக்குகள், பால் அடிப்படையிலான கீழ்மைப்படுத்தல்கள், கடந்த சில காலமாக அந் நிலைமைகளை மாற்ற எடுத்த முயற்சிகளை மீளவும் பின்னோக்கித் தள்ளும் நடவடிக்கைகள் போன்றன கடந்தகால தகாத செயல்கள் மீளவும் எழுவதற்கான அடையாளங்களாக உள்ளன.....'

இவ்வாறான பல குற்றச்சாட்டுகளை மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் வெளியிட்டிருந்தார். ஏற்கெனவே குறிப்பிட்ட பல சம்பவங்கள் கடந்தகால இருள் நிறைந்த நாட்களை நோக்கி நாடு மீண்டும் செல்வதற்கான அச்சம் தரும் எச்சரிக்கைகள் என ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

மனித உரிமை ஆணையாளர் தெரி வித்த அச்சமூட்டும் தோற்றப்பாடுகள் குறித்து இலங்கை அரசினால் முற் றாக நிராகரிக்க முடியவில்லை. இந் நிலையில்தான் இந்த அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகக் கூறிய அரசு தற்போது தனது நிரந்தரப் பிரதிநிதியைப் பேச அனுமதித்தது ஏன்? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இலங்கைக்கு ஆதரவாக சீனா மற்றும் பாகிஸ்தான் பிரதிநிதிகள் ஆதரவாக செயல்பட்ட போதிலும் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இவ் விவாதங்களில் நேரடியாக ஈடுபட்ட இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி தனது உரையில் இலங்கையில் மத சுதந்திரத்திற்கான சகல வாய்ப்புகளும் உண்டு எனவும், தமது நாட்டின் மத உரிமைக்கான வாய்ப்புகள் என்பது ஏனைய நாடுகள் பின்பற்றுவதற்கான சிறந்த மாதிரியாக அமையும் என்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ போர் தொடர்பாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் விதந்துரை களை ஆராய்வதற்கு ஆணைக்குழு அமைத்துள்ளதாகவும், அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து ஒரு மாதம்கூட ஆகாத நிலையில் அதற்கெதிரான விமர்சனங்கள் அதிகரித்துள்ளன என்றும் குற்றம் சாட்டினார்.

நாட்டின் சிவிலியன் நிர்வாகத்திற்குள் ராணுவத்தினரின் தலையீடுகளை அவர் நியாயப்படுத்தினார். அவர் தனது விவாதத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் அமெரிக்காவின் செயல்பாடுகளை உதாரணம் காட்டினார். உதாரணமாக சில நாடுகளில் அரசு மாறும்போது நிர்வாகமும் மாறுகிறது. அமெரிக்க அரசில் சுமார் 4000 அதிகாரிகள் மாறினர். அது போலவே இலங்கையிலும் அவ்வாறான மாற்றங்களைச் செய்ததாகவும். இலங்கையில் 20 முன்னாள் ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகளே அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர் என நியாயப்படுத்தினார். இலங்கையின் அரசியல் வரலாற்றிலே மிகவும் மோசமான நிர்வாகச்சிக்கல்தற்போது ஏற்பட்டிருக்கிறது. அரசின் போலி நியாயங்களை அரச அதிகாரிகளே நியாயப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கைக்கு சர்வதேச அளவில்ஏற்படுத்தப்படும்அவமானம் என்பது வெறுமனே ஆட்சியாளருக்கு உரித்தானதாக நாம் எண்ண முடியாது. நமது தாய்நாட்டின் கௌரவம் சில பதவி வெறி பிடித்த சந்தர்ப்பவாதிகளால் விற்கப்படுவது குறித்து சகலரும் சிந்திப்பது அவசியமாகிறது. ■




> **"மனித உரிமை ஆணையாளர் தெரிவித்த அச்சமூட்டும் தோற்றப்பாடுகள் குறித்து இலங்கை அரசினால் முற்றாக நிராகரிக்க முடியவில்லை. இந் நிலையில்தான் இந்த அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகக் கூறிய அரசு தற்போது தனது நிரந்தரப் பிரதிநிதியைப் பேச அனுமதித்தது ஏன்? இலங்கைக்கு ஆதரவாக சீனா மற்றும் பாகிஸ்தான் பிரதிநிதிகள் செயல்பட்ட போதிலும் மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை."**

# புலமைச் சிகரம் 10

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**01B.** தரப்பட்ட உருவை நிறைவு உரிய பகுதியை தெரிவு செய்தல்.

**விளக்கமும் விடைகளும் கற்றிடக் கற்றல்**

**2015 02**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும். படத்தில் பூரணம் இல்லாமல் உள்ள துடன் 01 விடையில் தரப்பட்டிருக்கும் ஆப்புக்களில் மேற் பகுதி கோலம் பொருந்தும் தரப்பட்டிருக்கும் உருக்களில் 02 உம் 03 உம் ஒரே மாதிரியாக இருந்தாலும் அவற்றின் கோலங்கள் தரப்பட்ட உருவுடன் பொருத்தமற்றது. எனவே

விடை 01

**2016 01**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும். படத்தில் பூரணம் இல்லாமல் தரப்பட்டிருக்கும் மூலைகளில் கடதாசி கப்பல் மேற் பகுதி கோலம் தரப்பட்டிருக்கும் உருக்களில் 01 ற்குப் பொருந்துகின்றது. 02 உம் 03 உம் அம்மாதிரியான தோற்றத்தைக் கொண்டிருக்கவில்லை. 02 வதில் குறுக்குக் கோடு இல்லை. 03 வதில் அடிக்கோடு இல்லை 02 உம் 03 உம் பொருத்தமற்றது.எனவே

விடை 01

**2016 02**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் மேற் பகுதி வலப்புற கோலம் பூரணம் இல்லாமல் உள்ளது. விடைகளில் தரப்பட்டிருக்கும் கோலங்களில் 02 வது பொருத்தமற்றது. காரணம் கீழ்புற வெள்ளை முக்கோணமில்லை.. 03 வதில் தரப்பட்டிருக்கும் உருவில் மேற்புற துண்டு முழுக்க நிழற்படுத் தப்பட்டுள்ளது பொருந்தாது. எனவே

விடை 01

**2017 01**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் கீழ் பகுதி வலப்புற கோலம் பூரணம் இல்லாமல் உள்ளது. விடைகளில்தரப்பட்டிருக்கும் கோலங்களில் 02 வது பொருத்தமானது. காரணம் நான்கு முக்கோணங்கள் உருவாகின்றது. அந்த விடையை பிள்ளைக்கு வரைந்து காட்டுங்கள். 01 வதில் தரப்பட்டிருக் கும் உருவில் முக்கோணம் கீழே வந்துள்ளது. எனவே பொருந்தாது. 03 வதில் தரப்பட்டிருக்கும் உருவில் முக்கோணத்தின் மேற்புறமாக கோடு உள் ளது. பொருந்தாது. எனவே

விடை 02

**2017 02**

சமச்சீர் பற்றி சிந்திக்க வேண்டும்.படத்தில் மேற் பகுதி வலப்புற கோலம் பூரணம் இல்லாமல் உள்ளது. விடைகளில் தரப்பட்டிருக்கும் கோலங்களில் 01 வது பொருத்தமானது. காரணம் ஒன்றுக்கொன்று செங்குத்தான நான்கு இலைகள் உருவாகின்றது. அந்த விடையை பிள்ளைக்கு வரைந்து காட்டுங்கள். 02 வதில் தரப்பட்டிருக்கும் உருவில் இரு குவிவானவில்லை வடிவம் வரவில்லை மேல் அரை வட்டமே உள்ளது. எனவே பொருந்தாது. 03 வதில் தரப்பட்டிருக்கும் உருவில் கீழ் அரைவட்டம் உள்ளது. உள்ளது. பொருந்தாது.. எனவே

விடை 01

**2017 13**

இது எண்கோலம் சம்பந்தப்பட்ட வினாவாகும்.தரப்பட்டுள்ள பெட்டியில. முதலாவது நிலைக்குத்து நிரலில் தானங்கள் 02 இனால் கூடிகிறது. இரண்டாவதுநிலைக்குத்து நிரலில் தானங்கள் 02 இனால் குறைவடைகிறது. மூன்றாவது நிலைக்குத்து நிரலில் தானங்கள் 02 இனால் கூடுகிறது நான்காவது நிலைக்குத்து நிரலில் தானங்கள் 02 இனால் குறைவடைகிறது. எனவே இதற்கு பொருத்தமானது

விடை 03

**2020 05**

இடப்புறக் கால் நீளமானது. வலப்புறக் கால் குட்டையானது. எனவே வளையம் உருவாக இடப்புறக் கால் கட்டையாகவும் வலப்புறக் கால் நீளமாகவும் இருக்க வேண்டும்.இதற்கு பொருத்தமான

விடை03

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்த வேண்டும்

## உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப் படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று 10 ஆவது நாளாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறை யிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு தமிழ் அரசியல் கைதி களின் விடுதலைக்கான இயக்கத்தின் இணைப்பாளர் அருட் தந்தை சக்திவேல் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கினர்.**



நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லை ஆதீனம் முன்பு யாழ்ப்பாணம் மற் றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்க ளால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் ஊடாக இலங்கை அரசாங்கத்தால் புரியப்பட் டுள்ள போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழினத்துக்கு எதிராக முன்னெடுக் கப்பட்ட இனவழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும்.

தமிழினத்தின் மீதான இனவழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசி யம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப் புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ)

# போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளின் மறியல் நீடிப்பு

கொழும்பு,மார்ச்10

போதைப்பொருள் கடத்தல்காரர்களு டன் தொடர்பிலிருந்து, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களில் ஒரு பகுதியை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்ததாகக் கூறப்பட்ட விடயத்தில், பி.என்.பி. எனப்படும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் 13 அதி காரிகள் உள்ளிட்ட 17 பேருக்கான விளக்கமறியில் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர்களை மார்ச் 23 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் உத்தரவிட் டுள்ளார். விசாரணைகளின் அடிப்படை யில் இவர்கள் பாதாள உலக நபரான ‘போடி லாஸ்ஸி’ என்பவருக்கு சொந்தமான துப்பாக்கி தொடர்பான விவரங்களை கண்டறிந்துள்ளதாகவும் குற்றவியல் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நேற்று நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் துப்பாக்கி தொடர்பான அரசு ஆய்வாளரிடமிருந்து அறிக்கை பெற சி.ஐ.டி.க்கு நீதிவான் அனுமதி வழங்கி னார். (எ)

# இரு கையெறி குண்டுகளுடன் ரி.ஐ.டியிடம் ஒருவர் சிக்கினார்

அம்பலாங்கொடை, மார்ச் 10

அம்பலாங்கொடை, பலப்பிட்டிய பகுதி யில் இரு கையெறி குண்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் கடந்த வாரம் ஒரு கொள்ளைச் சம்பவத் துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகி, பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேகநபருக்கு சட்ட விரோத மற்றும் அழிவுகரமான ஆயுதங் களை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 7 முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண் டனை விதிக்கப்படலாம் என பொலிஸார் கூறினர். அவரை அம்பலாங் கொடை நீதி வான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. (எ)

ஈழநாடு



# மேற்கு முனையம் குறித்து 'அதானி' நிறுவனத்துடன் அரசாங்கம் நேரடியாகவே கலந்துரையாடியது

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 10

**கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய முதலீட்டுத் திட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்தியாவின் 'அதானி" நிறுவனத்துடன் நேரடியாக கலந்துரையாடலில் ஈடுபட்டது என அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் இலங்கையின் தேசப்பற்று இயக்கங்கள், தொழில் சங்கங்கள், துறைமுக அதிகார சபைக் குரிய ஊழியர்கள் கொள்கை ரீதியில் ஒரு முக்கிய தீர்மானத்தை எடுத்துக்கொண்டதனால் கிழக்கு முனையம் இலங்கையின் துறைமுக அதிகார சபையின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் விருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் உரிய வகையில் இடம்பெறும் என முன்னராகவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நடவடிக்கைகள் அவ்வாறே இடம்பெறும். மேலும் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் இந்திய மற்றும் ஜப்பான் நிறுவனத்துடன் இணைந்து ஒரு இணைப்புத் திட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இணைய வழியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

'கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைக்காக இந்தியாவின் அதானி நிறுவனம் முன்மொழியப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து மேற்கு முனைய முதலீட்டுத் திட்டத்தை இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, இந்தியா மேற்கு முனைய அபிவிருத்தித் திட்டத்துக்கு இன்னொரு நிறுவனத்தை முன்மொழியவில்லை. மாறாக அதானி நிறுவனத்தையே மேற்கு முனைய அபிவிருத்தித் திட்டத்துக்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய முதலீட்டுத் திட்டம் குறித்து இலங்கை அரசாங்கம், அதானி நிறுவனத்துடன் நேரடியாக கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது" எனத் தெரிவித்தார். (எ)

# இந்திய தடுப்பூசி கிடைப்பதில் சிறிய காலதாமதம் ஏற்படும்

## வீண் அச்சம் தேவையில்லை என்கிறார் அமைச்சர் ரமேஷ்



கொழும்பு,மார்ச்.10

இந்தியாவிலிருந்து அடுத்த கட்ட கொரோனா தடுப்பூசிகள் கிடைப்பதில் சிறிய கால தாமதம் ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாரியதொரு கால தாமதம் இன்றி ஒரு சில வாரங்களில் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். எனவே முதற்கட்டமாக தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: உலகில் இதுவரையில் ஒரு தடுப்பூசி கூட கிடைக்கப்பெறாத சுமார் 110 நாடுகள் காணப்படுகின்றன. இலங்கைக்கு இதுவரையில் 1.26 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எதிர்வரும் தினங்களில் மேலும் ஒரு மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. அவற்றில் இந்திய நிறுவனத்திடமிருந்து அடுத்த கட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில், அந்நிறுவனத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக தாமதமடையக் கூடும். எனினும் கூடிய விரைவில் அவற்றை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

முதற்கட்டமாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாக பெற்றுக் கொள்வதற்கு மேலும் சில வாரங்கள் உள்ளன. எனவே அதற்கிடையில் தேவையான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு தடுப்பூசி கட்டாயம் வழங்கப்பட வேண்டிய சகல இலங்கை பிரஜைகளுக்கும் எவ்வித பாகுபாடும் இன்றி வழங்கப்படும். பிரபலமானோருக்கு தடுப்பூசி வழங்குவதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றதே தவிர இதில் எவ்வித உயர்வு தாழ்வும் கிடையாது.

அரசாங்கத்திற்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவே முடியாது என்று எதிர்க்கட்சி தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. எனினும் நாம் அவற்றை பொய்யாக்கி தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம். தடுப்பூசிகள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறப்பட்ட போதிலும், உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அனுமதிக்கப்பட்ட தடுப்பூசியை மக்களுக்கு வழங்கிய அவை பாதுகாப்பானவை என்பதை நிரூபித்துள்ளோம்.

மேலும், ரஷ்ய அரசாங்கத்தினால் ஸ்புட்னிக் எனப்படும் கொரோனா தடுப்பூசியை இலங்கைக்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் இந்தத் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், இலங்கை ஔடத மருந்தாக்கல் கூட்டுத்தாபனமும் அனுமதியளிக்க வேண்டும்- என்றார். (எ)

# நாம் சீராக பேணிய இராஜதந்திர உறவை இந்த அரசு சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ளது!

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ஷண ராஜகருணா

கொழும்பு. மார்ச் 10.

நாம் சீராக பேணி வந்த இராஜதந்திர உறவுகளை இன்று இந்த அரசாங்கம் சிக்கலுக்கு உட்படுத்தியிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருண தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று இராஜதந்திர சிக்கலுக்குள் இலங்கை தாமாகவே இறுகிக் கொண்டுள்ளது. உலக நாடுகளின் சர்வதேச அதிகாரப் போட்டிக்குள் இலங்கை சிக்கியுள்ளது. சீனாவுடனான நெருங்கிய உறவால் ஐக்கிய இராச்சியம், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் போன்றன இவர்களின் முன்னைய ஆட்சியில் ஒதுங்கி இருந்தன. இந்த ஒதுங்கி இருப்புக்குள் ஏனைய சக்திகள் உள்விவகாரங்களில் தலையிட்டு இறுதியில் மின்சாரக் கதிரை வரை சென்றது.

இவற்றை நாங்கள் நல்லாட்சியில் சீர் செய்து இராஜதந்திர உறவுகளை சிறப்பாக போணினோம். இன்று மீண்டும் இந்த ஆட்சியிலும் இராஜதந்திர சிக்கலை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். ஏன் இவ்வாறான பிரச்சினைக்குள் வேண்டும் என்றே சிக்கியுள்ளதெனில், அன்மையில் வரும் தேர்தல்களில் இவற்றை பயன்படுத்தி மக்களை ஏமாற்றி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்காகவேயாகும்.

சர்வதேச தலையீடுகள் அதிகரித்துள்ளன, நாட்டைப் பாதுகாக்க எங்களுக்கு வாக்களியுங்கள் என்று வெற்று கோஷங்களை தூக்கிப் பிடிக்கவே இவ்வாறான செயற்பாடுகளை செய்கின்றனர். நேற்று சர்வதேச மகளிர் தினம். தமது உரிமைகளுக்காக வீதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட பெண்களை பொலிஸார் தாக்கிய துரதிஷ்ட நிலையை ஊடகங்களில் காண கிடைத்தது. இவ்வாறான செயல்பாடுகளை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். மகளிர் தினத்திலயே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. இது தான் நாட்டு பெண்களுக்கு இந்த அரசாங்கம் கொடுக்கும் மதிப்பாகும்.

இது தவிர, இன்று நாட்டின் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்தும் போது அத்தியவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளன. வர்த்தமானிகளில் உள்ள விலைக்கு சந்தையில் பொருட்கள் இல்லை. மேலும் இன்று தடுப்பூசி பாரிய போதாமையாக இருக்கிறது. நான்கு வாரங்களில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதாகக் கூறிய இந்தியா மீள வழங்குவதில்லை என்று தெரிவித்துள்ளது. நான்கு வாரங்களை அண்மித்துள்ளோம். இவற்றுக்கு மாற்றீடுகள் அரசாங்கத் திடம் உண்டா?" எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# ஜனாதிபதியின் சொத்து மதிப்பை உடன் பகிரங்கப்படுத்த வேண்டும்

## எரான் விக்கிரமரத்ன வலியுறுத்து

கொழும்பு,மார்ச்.10

ஜனாதிபதி மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை பின்பற்றுபவராக இருப்பின் தனது சொத்து மதிப்பை நாட்டு மக்களுக்கு உடன் பகிரங்கப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் செயல்பாடு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கங்கள் நீதிமன்றத்தை அவமதித்துள்ளது. நீதிமன்றில் விசாரணையில் உள்ள ஒரு வழக்கு குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடையாது.

நீதிமன்ற விசாரணையில் உள்ள ஒரு வழக்கு பற்றி அரசியல் மட்டத்தில் கருத்துரைப்பது கூட நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும் நிலையில் வழக்கு விசாரணைகளை எவ்வாறு ஆணைக்குழுவால் முடிவுக்கு கொண்டுவர முடியும்.

ஆளும் தரப்பில் உள்ளவர்களுக்கு எதிராக நீதிமன்றில் விசாரணையில் இருந்த வழக்குகள் பல ஆணைக்குழுவால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றின் அதிகாரத்தை ஆணைக்குழுவுக்கு வழங்கியது யார்? இவ்விடயம் குறித்து பாராளுமன்றில் பல விடயங்களைப் பகிரங்கப்படுத்துவோம் என்றும் அவர் கூறினார். (எ)



# மலை நிறைந்த தங்கம்! அள்ளி சென்றனர் மக்கள்

## கொங்கோவில் சம்பவம்

கின்ஷாசா, மார்ச் 10

கொங்கோ நாட்டின் ஒரு மலையிலுள்ள மண்ணில் பெருமளவு தங்கம் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அப்பகுதி கிராம மக்கள் போட்டி போட்டுக் கொண்டு தங்கத் தாது நிறைந்த மண்ணை வெட்டி எடுத்து அள்ளிச் சென்றனர். இது தொடர்பான காணொலி பதிவு சமூகவலைத்தளத்தில் பிரபலமாகியுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் கிவு மாகாணத்தின் லுகிகி என்ற கிராமத்திலேயே இந்தச் சம்பம் இடம்பெற்றுள்ளது. இங்குள்ள ஒரு மலையிலுள்ள மண்ணில் 60 - 90 வீதம் தங்கத் தாது நிறைந்துள்ளது என்று அண்மையில் கண்டறியப்பட்டது.

இந்த விவரம் கிராம மக்களுக்கு தெரியவரவே, மக்கள் அனைவரும் அப்பகுதிக்கு விரைந்து, போட்டி போட்டுக் கொண்டு தாது மண்ணை தோண்டினர். அதனை அலசி தங்கம் எடுப்பதற்காக பைகளில் நிறைத்து தங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றனர்.

இது தொடர்பான காணொலி காட்சியை அகமது அல்கோபரி என்ற பத்திரிகையாளர் ருவிட்டரில் பகிர்ந்தார். இதைத் தொடர்ந்து, அது சமூக வலைதளங்களில் பிரபலமானது.

இதுபற்றி அறிந்த அரசு மலையை தோண்டுவதற்கு தடை விதித்ததுடன், அப்பகுதியில் பாதுகாப்புக்காக இராணுவத்தையும் குவித்துள்ளது.

இதேவேளை, லுகிகி கிராமத்தில் வைரம், செப்பு போன்ற தாதுப் பொருட்களும் அதிகளவில் உள்ளன என்று கருதப்படுகின்றது. (ஐ)

# ஈக்குவடோரிய கினி வெடிவிபத்து: 98 பேர் உயிரிழப்பு: 615 பேர் காயம்!

மலாபோ, மார்ச் 10



மத்திய ஆபிரிக்க நாடான ஈக்குவடோரிய கினி நாட்டின் முக்கிய நகரமான பட்டாவில் அமைந்துள்ள இராணுவத் தளமொன்றில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்தில் 98 பேர் உயிரிழந்தனர் - 615 பேர் காயமடைந்தனர் என்று உறுதிப் படுத்தப்பட்டது.

கடலோர நகரமான பட்டாவில் உள்ள கொன்ரோமா என்ற இராணுவத் தளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த வெடி விபத்து ஏற்பட்டது.

1979 முதல் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் தியோடோரோ ஒபியாங் நுயெமா கூறுகையில், "டைனமற்றை கையாள்வது தொடர்பான அலட்சியம்தான் பேரழிவிற்கு காரணம் என்றும், வெடிப்புகள் பட்டாவில் உள்ள அனைத்து வீடுகளையும் கட்டடங்களையும் சேதப்படுத்தியுள்ளது - என்றார்.

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியால் எண்ணெய் உற்பத்தி நாடான ஈக்குவடோரிய கினி பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையிலேயே இந்த வெடிவிபத்து இடம்பெற்றுள்ளது.

கமரூன் நாட்டுக்கு தெற்கே அமைந்துள்ள 13 இலட்சம் மக்களைக் கொண்ட மத்திய ஆபிரிக்க நாடான ஈக்குவடோரிய கினி, 1968 இல் சுதந்திரம் பெறும் வரை ஸ்பெயினின் காலனியாக இருந்தது. பட்டாவில் சுமார் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐந்து நிமிடங்களில் சார்ஜ் ஆகும் மின்கலம் கண்டுபிடிக்கப்பட்டது

## இஸ்ரேல் புதிய சாதனை




ஜெருசலேம், மார்ச் 10

அதிவேக சார்ஜ் தொழில் நுட்பங்களில் நிபுணத்துவம் கொண்ட இஸ்ரேலை சேர்ந்த ஸ்டோர்டொட் என்ற ஸ்ராட் அப் நிறுவனம் முதல் தலைமுறை லித்தியம் அயன் மின்கலத்தை (பற்றறி) உருவாக்கியுள்ளது.

இந்த மின்கலம் முழுவதுமாக சார்ஜ் ஆவதற்கு 5 நிமிடங்களே எடுக்கும் என்கிறார் நிறுவனத்தின் நிறுவனர் டொரன் மயர்ஸ்ராரவ்.

அத்துடன், "இந்த அதிவேக மின்கல தொழில் நுட்பமானது எலெக்ட்ரிக் வாகன ஓட்டுநரின் அனுபவத்தையே தலைகீழாக மாற்றக்கூடியது. நெடுந்தூர பயணங்களில் உள்ள சார்ஜ் ஏற்றும் கவலையை முற்றிலுமாக நீக்கிவிடுகிறது. சார்ஜ் செய்ய சில மணி நேரங்கள் ஆகும் என்ற நிலையை இந்த மின்கலம் மாற்றிவிடும்" என்கிறார்.

இதற்காக பல்வேறு பரி சோதனைகளை இந்நிறுவனம் செய்துள்ளது. இந்நிறுவனம் கைபேசி, ட்ரோன், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்களுக்கான மின்கலங்கைளத் தயாரித்து வருகின்றது. (ஐ)




## பெண்கள் மீதான வன்முறை:

# பாண் சுற்றும் உறைகள் மீது விழிப்பூட்டும் பதிவுகள் அச்சு!

பாரிஸ், மார்ச் 10

பிரான்ஸில் "பகெத்" (baguettes) எனப்படுகின்ற சாதாரண பாண் நாளாந்தம் பெரும்பாலானோர் நுகரும் பிரதான உணவுப் பொருளாக உள்ளது. இதனைக் கவனத்தில் கொண்டு பாண் வாங்குவோரிடம் குறிப்பாக பெண்கள் மத்தியில் வீட்டு வன்முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த புதுவிதத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி விழிப்பூட்டும் விடயங்கள் அச்சிடப்பட்ட பாண் சுற்றும் கடதாசிப் பைகளை வெதுப்பகங்களுக்கு வழங்கும் சேவையில் சமூக நல அமைப்பு ஒன்று ஈடுபட்டுள்ளது.

பாரிஸின் புறநகரான நுவாசி லூ செக் நகரசபை மேயர் தனது நிர்வாகப் பிரிவுக்குள் உள்ள வெதுப்பகங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்த இத் திட்டத்தை பெண்களுக்காக சமூக வலைத்தளங்களில் இயங்கும் "லாசொசியேசன் இன் அவன்ற் ரோற்றஸ்" (l'association En avant toute(s) இயக்கம் நாடு முழுவதும் விஸ்தரித்துள்ளது.

விழிப்புணர்வுத் தகவல்கள் பொறிக்கப்பட்ட பேப்பர் உறைகள் இலட்சக்கணக்கில் அச்சிடப்பட்டு மகளிர் தினமான நேற்று முன்தினம் நாடெங்கும் வெதுப்பகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கணவன் - மனைவி இடையிலான வன்முறைகளின் அளவீடுகள், அது குறித்து முறையிடும் வழி முறைகள், தொடர்பு இலக்கங்கள் போன்ற பல தகவல்கள் பாண் உறைகளில் அச்சிடப்பட்டுள்ளன. (ஐ)

# இஸ்ரேலில் 56 வீதமான மக்களுக்கு தடுப்பூசி!

ஜெருசலேம், மார்ச் 10

இஸ்ரேலில் 50 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு கொரோனா தடுப்பு மருந்து போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.



இது குறித்து அந்த நாட்டின் சுகாதாரப் பிரிவு தெரிவிக்கையில், "நாட்டில் 50 இலட்சத் துக்கும் அதிகமான மக்களுக்கு கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப் பட்டுள்ளது. அதாவது 56வீதமான மக்களுக்கு கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறும்போது, "அனைவரும் கொரோனா தடுப்பு மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏப்ரல் மாதத்துக்குள் மக்கள் தொகையில் 16 வயதைக் கடந்த அனைவரும் கொரோனா தடுப்பு மருந்தைப் பெறுவார்கள்" என்றார்.

இஸ்ரேலில் பைஸர் கொரோனா தடுப்பு மருந்து பயன்பாட்டில் உள்ளது. இந்த நிலையில் இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட ஹலோசேட்டர் கொரோனா தடுப்பு மருந்து மூன்றாம் கட்டப் பரிசோதனையில் உள்ளது(ஐ)

# அ.தி.மு.க. கூட்டணியில் வெளியேறியது தே.மு.தி.க.

சென்னை, மார்ச் 10

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனான (அ.தி.மு.க.) கூட்டணியில் இருந்து விஜயகாந்த் தலைமையிலான தேசிய திராவிட முற்போக்கு கழகம் (தே.மு. தி.க.) வெளியேறியுள்ளது.

2011ஆம் ஆண்டு முதல் அ.தி.மு.க. கூட்டணியில், தே.மு.தி.க. நீடித்த நிலையில் இந்த வெளியேற்றம் இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் மாதம் தமிழக சட்டசபைக்கு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட நெருக்கடியே இந்த வெளியேற்றத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

2011இல் ஒதுக்கப்பட்டது போன்று 41 தொகுதிகளை தே.மு.தி.க. கோரியது. அது மறுக்கப்பட்ட பட்சத்தில் 23 தொகுதிகளுக்குப் பேரம் பேசப்பட்டது. ஆனால், அ.தி.மு.க. 13 - 15 தொகுதிகளையே வழங்க சம்மதித்தது. இதை ஏற்காமலே கூட்டணியை விட்டு வெளியேறியது தே.மு.தி.க.

இதேவேளை, தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடும் முடிவில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், கட்சியின் தலைவர் விஜயகாந்த் இது தொடர்பில் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் விடுக்கவில்லை. (ஐ)



# சென்னை சுப்பர் கிங்ஸின் இயக்குநராகின்றார் டோனி

சென்னை, மார்ச் 10

இந்தியா அணியின் முன்னாள் தலைவரும், ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான மகேந்திரசிங் டோனி, இந்த ஆண்டுடன் சகல கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இதையடுத்து அவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இயக்குநராக நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு தோல்விக்குப் பின்னர் சென்னை சுப்பர் கிங்ஸை மாற்றி அமைக்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இந்த ஆண்டு சுந்தர் ராமன் சென்னை அணியின் ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளரான ஸ்ரீபன் பிளமிங்கும் இந்த ஆண்டுடன் அணியிலிருந்து வெளியேறவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: இறுதிப் போட்டி இடமாற்றம்!

டுபாய், மார்ச் 10

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இந்தியா, நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இப்போது இடத்தை மாற்றியிருக்கிறது சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.).

உலக டெஸ்ட் சம்பியின்ஷிப் இறுதிப்போட்டி எதிர்வரும் ஜூன் 18 முதல் 22 வரை சௌத்தாம்ப்டனில் உள்ள ஏஜியஸ் பௌல் மைதானத்தில் நடைபெறும் எனத் தெரிகிறது.

கொரோனா காரணமாகவே இடம் மாற்றப்பட்டிருக்கிறது. ஏஜியஸ் பௌல் மைதானத்துக்கு உள்ளேயே ஹோட்டல்கள் உள்ளன. இதனால் வீரர்கள் வெளியே தங்கிவிட்டு மீண்டும் மைதானத்துக்கு உள்ளே வரவேண்டியதில்லை. பயோபபுள் அமைப்பது மிக இலகுவானது என்பதால்தான் சௌத்தாம்ப்டனில் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.




இந்திய அணி தனது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக வேறு நாட்டின் மைதானத்தில் நியூஸிலாந்தில் மோதவுள்ளது.

சௌத்தாம்ப்டன் மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது. நியூஸிலாந்தில் ட்ரெண்ட் போல்ட், ரிம் சௌதி, கைல் ஜேமிசன், மேட் ஹென்றி எனத் தரமான வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பது நியூஸிலாந்துக்கு கூடுதல் பலம்.

சௌத்தாம்ப்டனில் கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. வேகப்பந்து வீச்சாளர்கள் ஷேனன் கேப்ரியெல்லும், ஜசன் ஹோல்டரும் அதிக விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தனர். (ஐ)

# தென்னாபிரிக்க ஜாம்பவான் அணியை வீழ்த்தியது இலங்கை ஜாம்பவான் அணி




ராஜ்பூர், மார்ச் 10

தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணியை 9 விக்கெட்களால் இலகு வெற்றி கொண்டது இலங்கை ஜாம்பவான்கள் அணி.

இந்தியாவில், வீதிப் பாதுகாப்பு உலக இருபது - 20 சம்பியன் தொடர் நடக்கிறது. இதில், இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா நாடுகளின் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் விளையாடி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு ராஜ்பூர் மைதானத்தில் நடந்த போட்டியில் ஜொன்டி ரொட்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணியும் திலகரட்ண டில்ஷான் தலைமையிலான இலங்கை ஜாம்பவான்கள் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இலங்கை அணியினரின் பந்து வீச்சில் திக்குமுக்காடியது. 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்த அந்த அணி 89 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

தென்னாபிரிக்கா சார்பில், அன்ட்ரூ புட்டிக் மட்டும் 39 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

இலங்கை அணி சார்பில் பந்துவீசிய சனத் ஜெயசூரியா, ரங்கன ஹேரத், நுவான் குலசேகர ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், திலகரட்ண டில்ஷான், தம்மிக பிரசாத் மற்றும் அஜந்த மெண்டீஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

90 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 13.2 ஓவர்களில் ஒரு விக்கெடடை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

சனத் ஜெயசூரிய எட்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, டில்ஷான் 40 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களுடனும், உபுல் தரங்க 31 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகனாக 2 விக்கெட்களை கைப்பற்றிய ரங்கன ஹேரத் தெரிவானார். அவர் 4 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 12 புள்ளிகளுடன் இலங்கை அணி முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளது. (ஐ)




# ஐ.சி.சி.யின் பெப்ரவரி மாத சிறந்த வீரராக அஸ்வின்!

டுபாய், மார்ச் 10

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) சிறந்த வீரராக சுழல்பந்துவீச்சாளர் அஸ்வின் தெரிவாகியுள்ளார்.

மாதத்தின் சிறந்த வீரர்களை தெரிவு செய்து, ஆண்டு முழுவதற்குமான சிறந்த வீரரை தெரிவு செய்து விருது வழங்கும் பணியை செய்து வருகின்றது. ரசிகர்கள், பத்திரிகையாளர்கள், ஒளிபரப்பு நிறுவனங்களின் வாக்குகளின் அடிப்படையில் சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதன் அடிப்படையில் ஜனவரி மாதத்திற்கான சிறந்த வீரராக இந்திய அணியின் ரிஷப் பந்த் தெரிவானார். இந்நிலையில் பெப்ரவரி மாதத்தின் சிறந்த வீரராக இந்திய அணியின் அஸ்வின் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அண்மையில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் தமிழரான அஸ்வின் தனது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 400 விக்கெட்கள் என்ற மைல்கல்லையும் தொட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெடரரின் சாதனையை தகர்த்தார் ஜொகோவிக்

லண்டன், மார்ச் 10

ரென்னிஸ் வீரர்களுக் கான தரவரிசையில் அதிக வாரங்கள் முதல் இடத்தில் இருந்து பெடரரின் சாதனையை முறியடித்தார் பிரபல வீரரான ஜொகோவிக்.

அவர், 311 வாரங்கள் முதலிடத்தில் இருந்து இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

33 வயதான அவர் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நடாலை பின் தள்ளி முதலிடத்தைப் பிடித்தார். இதன் பின்னர் தொடர்ச்சியாக 36 வாரங்கள் அவர் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளார்.

முன்னதாக இந்த சாதனையை சுவிற்சர்லாந் தின் பிரபல வீரரான ரோஜர் பெடரர் தம் வசம் வைத்திருந்தார். அவர் 310 வாரங்கள் முதலிடத்தில் இருந்து இந்த சாதனையை படைத்திருந்தார். (ஐ)

## 3,300 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மார்ச்.10

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 3,335 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் 3300 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்றுக்காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 3,335 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, நாட்டின் எந்தப் பகுதிகளில் வசித்து வந்தாலும், தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும். அதற்கமைய வீட்டைவிட்டு வெளியேறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சட்ட விதிகளைத் தொடர்ந்தும் பின்பற்றவேண்டும்.

சட்டவிதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் கூறினார். (எ)

# முல்லைத்தீவில் மட்டும் யுத்தத்துக்கு பின்னர் 67 பௌத்த விகாரைகள்!

## ஒக்லாண்ட் நிறுவனத்தின் அதிர்ச்சி அளிக்கும் அறிக்கை

வாஷிங்டன். மார்ச் 10

**வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் தீவிரமான நில அபகரிப்பு இராணுவம் மற்றும் அரச திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், இராணுவ மயமாக்கல் அதீதமான அளவில் காணப்படுவதாகவும் உலகின் பல நாடுகளிலும் நில ஆக்கிரமிப்பு பற்றி ஆய்வு நடத்திவரும் அமெரிக்காவிலிருந்து செயல்படும் ஒக்லாண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.**



இது குறித்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 என்ற அளவில் இருப்பதாகவும், சுமார் 100க்கும் மேற்பட்ட முகாம்கள் மிகவும் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக்கும் நாயாறுக்கும் இடையிலான 15 கிலோ மீற்றர் , முல்லைத்தீவுக்கும் தாண்டுவனுக்கும் இடையிலான 15 கிலோ மீற்றர், முல்லைத்தீவுக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையிலான 26 கிலோ மீற்றர், முல்லைத் தீவுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையிலான 17 கிலோ மீற்றர் பகுதிகளில் மட்டும் 33 இராணுவ முகாம்கள் இருப்பதாகவும் அளவுக்கு அதிகமான இராணுவமயமாக்கல் பொதுமக்களின் வாழ்வாதார செயல்பாடுகளை மிக மோசமாக பாதித்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் மட்டும் ஆகக்குறைந்தது 16,910 ஏக்கர் தனியார் மற்றும் அரச காணிகளை முல்லைத்தீவில் அபகரித்துள்ளனர். இதுபற்றிய விபரமான புள்ளிவிபரம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் காடுகளுக்குள் இருக்கும் முகாம்களுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள நிலம் கணக்கில் எடுக்கப்படவில்லை.

வன இலாகா திணைக்களம் 32 110 ஏக்கர், வனஜீவராசிகள் திணைக்களம் 23,515 ஏக்கர், தொல்பொருள் திணைக்களம் 202 ஏக்கர், மகாவலி அதிகார சபை 4,368 ஏக்கர் நிலத்தையும் அபகரித்துள்ளன. அத்துடன், சுமார் 25,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம் மணலாறில் வெலிஓயா பிரதேச செயலக பிரிவு உருவாக்குவதற்காக கடந்த பல வருடங்களாக அபகரிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 80,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம் முல்லைத்தீவில் இராணுவம் மற்றும் அரச திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இது காடுகள் தவிர பொது மக்கள் பயன்பாட்டுக்கு உரிய மொத்த நிலபபரப்பில் ( 201,617 ஏக்கர்) 40 சத வீதத்துக்கும் அதிகமாகும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத் தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.” - என்றுள்ளது.

# இலங்கை இராணுவத்தை பழிதீர்க்க புலம்பெயர் அமைப்புக்கள் முயற்சி

## இராணுவத் தளபதி காட்டம்

கொழும்பு, மார்ச்.10

இலங்கை இராணுவத்துக்கு எதிராக முன்வைக்கும் போர்க் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் விதமாக அரசாங்கம் முன்னெடுக்கும் செயல்பாடுகள் திருப்தியளிப்பதாகவும், மனிதாபிமானமாக நாம் முன்னெடுத்த இந்தப் போராட்டம் குறித்து எவரும் எமக்கு கற்பித்துத்தர வேண்டிய அவசியம் இல்லை எனவும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இராணுவத்தை பழிதீர்க்க, புலம்பெயர் அமைப்புக்களும், இங்குள்ள சிலரும் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வருவதுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவம் மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, இலங்கைக்கு எதிராகக் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இது தொடர்பில் வினவிய போதே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் நகர்வுகளை கையாள்வதில் அரசாங்கம் செய்ய வேண்டிய மிகச்சரியான நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றது.



இராணுவத்தை பாதுகாக்கும் விதமாக அல்லது, இராணுவத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அரசாங்கத் தரப்பினர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இது எமக்கும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு காரணியாகக் கருதுகின்றோம். பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, பொய்யான சாட்சியங்களை உருவாக்கி இலங்கை இராணுவத்தை அவமதிக்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. புலம்பெயர் அமைப்புக்களின் பணம் காரணமாக இங்குள்ள ஒரு சிலரும் இராணுவத்தை குற்றம்சுமத்தி வருகின்றனர்.

எவ்வாறு இருப்பினும் ஒரு சில நாடுகளுக்கு இந்த நாட்டின் அமைதியை சீர்குலைந்து நாட்டில் இன முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவை உள்ளன.

அதற்கான வெளிப்பாடுகள் இன்று மனித உரிமைகள் பேரவையிலும் வெளிப்பட்டு வருகின்றது. இராணுவம் மீது போர்க் குற்றங்களை சுமத்தி அதன் மூலமாக இராணுவத்தை பழிதீர்க்க முடியும் என்ற நோக்கம் அவர்களிடம் உள்ளது. ஆனால், இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது? என்பது எமக்கு மட்டுமே தெரியும். மனிதாபிமானமாக நாம் முன்னெடுத்த இந்தப் போராட்டம் குறித்து எவரும் எமக்கு கற்பிக்க வர வேண்டிய அவசியம் இல்லை.

யுத்தத்தை 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரே எம்மால் முடிவுக்கு கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், அதனால் ஏற்படும் அழிவுகள் குறித்து எமக்கு நன்றாகத் தெரியும்.

அப்பாவி தமிழ் மக்களை பணயம் வைத்தே விடுதலைப் புலிகள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனைக் கருத்தில் கொண்டும், பொது மக்கள் அழிவுகளை சந்திக்கக் கூடாது அல்லது அழிவுகள் மிக குறைவாக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு நாம் மிகக் கவனமாக பயங்கரவாதத்தை மாத்திரம் இலக்கு வைத்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தோம்.

எனவே, இன்று யுத்தக் குற்றங்களை சுமத்தி இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் நடவடிக்கைகளில் புலம்பெயர் அமைப்புக்களும், இலங்கையில் ஒரு சிலரும் முன்னெடுத்து வருகின்றனர்.

இப்போது இல்லாவிட்டலும் எப்போதாவது அவர்களுக்கும் உண்மை விளங்கும். இலங்கையில் மக்கள் அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை அவர்களும் உருவாக்கித்தர வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். மாறாக யார் மீதும் நாம் வைராக்கியத்தை கொட்டி அவர்களை எமது எதிரிகளாக கருதும் செயல்பாடுகளை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் கூறினார். (எ)



# இரண்டு கோடி ரூபா பெறுமதியான 15,200 லீற்றர் எதனோல் பறிமுதல்

கொழும்பு,மார்ச்.10

சுங்க மத்திய புலனாய்வுப் பணியகத்துடன் இணைந்த அதிகாரிகள் 2 கோடி ரூபா பெறுமதியான 15,200 லீற்றர் எதனோல் கொண்ட கொள்கலன்களை பறிமுதல் செய்ததாக சுங்கப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்ரியா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, ராஜகிரிய பகுதியிலுள்ள ஒரு இறக்குமதி நிறுவனத்தின் பெயரில் 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் திகதியன்று சிங்கப்பூரிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு இந்தக் கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டன என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

2016 முதல் வணிகத்தில் ஈடுபடாத ஒரு தொழிலதிபருக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்தின் பெயரில் இந்த சரக்குகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

சுங்க அதிகாரிகள் சரக்குகளை இறக்குமதி செய்த நிறுவனத்துக்கு துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கூறி கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

எனினும் அதற்கு யாரும் பதிலளிக்கவில்லை. அதனையடுத்தே கொள்கலன்களை திறந்து அதனுள் அடைக்கப்பட்டுள்ள திரவியங்களை ஆய்வு செய்தனர்.

இந்தக் கொள்கலனில் 12,220 கிலோ கிராம் தொழில்துறை இரசாயனங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும், சுங்க அதிகாரிகளின் ஆய்வக பரிசோதனையில் இந்தக் கொள்கலனில் 76 பீப்பாய்களில் அடைக்கப்பட்ட 15,200 எதனோல் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இலங்கை சுங்கத்தின் மத்திய புலனாய்வு பிரிவு அதிகாரிகள் எதனோல் கொண்ட கொள்கலனின் உண்மையான உரிமையாளர்களைக் கண்டறிய விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

இலங்கைக்கு எதனோல் இறக்குமதி செய்வது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கொள்கையாகவும், கலால் சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ளது. (எ)

## இதுவும் நடந்தது!

சிவாஜி கணேசன் நடித்த தங்கப்பதக்கம் திரைப்படத்தில், நகைச்சுவை நடிகரும் பிரபல அரசியல் விமர்சகருமான 'துக்ளக்' சோ இரட்டை வேடத்தில் நடித்திருப்பார்.

ஒரு சோ பொலிஸ் கான்ஸ்டபிளாக நடிப்பார். அவரது சகோதரராக மற்றுமொரு சோ உள்ளூர் அரசியல்வாதியாக நடித்திருப்பார்.

உள்ளூர் அரசியல்வாதி என்றால் அப்போதுதான் சென்னை நகராட்சி உறுப்பினராக அரசியலில் பிரவேசித்திருப்பார்.

அரசியல் கூட்டங்களில் அவர் ஆற்றுகின்ற உரைகள் நகைச்சுவையாகவும் அதேவேளையில் தமிழக அரசியலையும் அரசியல்வாதிகளையும் பிரதிபலிப்பதாகவும் இருக்கும்.

உள்ளூர் அரசியல் மேடைகளில் அவர் அடிக்கடி அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக் கும் எச்சரிக்கை விடுப்பார்.

'அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் எச்சரிக்கை விடுக்கிறேன். நான் ஆணையிட்டால் உங்கள் நாடுகளில் பூகம்பம் வெடிக்கும்' என்று அவர் உரையாற்றுகின்றபோது அங்கே முன்னால் இருக்கின்ற அவரது தொண்டர்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்வார்கள்.

ஜெனிவாவில் இப்போது வரப்போகின்ற தீர்மானம் சிறிலங்காவுக்கு எவ்வளவு முக்கியமானதோ அதைவிட முக்கியமானது தமிழ்மக்களுக்கு. மனித உரிமை மீது அக்கறையுள்ள மேலை நாடுகள் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தம்மாலான முயற்சிகளை செய்துகொண்டிருக்கின்றன. பிரிட்டன் தலைமையில் இந்த நாடுகள் சிறிலங்காவுக்கு எதிராக தமது தீர்மானத்தை வடிவமைத்து மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்து அதற்கு உறுப்பு நாடுகளின் ஆதரவை பெறும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன. இந்தத் தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தவேண்டும் என்பதே தமிழ்மக்களின் பிரதான கோரிக்கையாக இருந்து வருகின்றது. இதற்காக வடக்கு, கிழக்கு எங்கும் பல்வேறு போராட்டங்களில் சிவில் அமைப்புக்களும் தன்னார்வ அமைப்புக்களும் செய்துகொண்டிருக்கின்றன. இந்த போராட்டங்களில் அவ்வப்போது நமது தலைவர்களும் தலைகாட்டிவருகின்றனர்.

தீர்மானத்தில் என்ன விடயங்கள் இடம்பெறவேண்டும் என்று நாம் விரும்புகின்றோமோ அவற்றை அதில் இடம் பெறச்செய்வதற்கு இதுபோன்ற போராட்டங்களை வடக்கு, கிழக்கிலிருந்து செய்துகொண்டிருந்தால் மாத்திரம் போதுமானதா? உண்மையில் நாம் என்ன செய்திருக்கவேண்டும்?

இந்த தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என்று விரும்புகின்ற நாடுகளின் தூதுவர்களை சந்தித்து அவர்களுக்கு நமது கோரிக்கையின் நியாயத்தை எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். அதை தொடர்ச்சியாக செய்திருக்க வேண்டும். அந்த தீர்மானத்திற்கு ஐ. நா. மனித உரிமை பேரவையில் அங்கத்துவம் பெற்றள்ள நாடுகளின் ஆதரவைத் திரட்ட அவர்களையும் அணுகியிருக்கவேண்டும். கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் மாத்திரமே ஒருதடவை ஒருசில தூதுவர்களைச் சந்தித்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

அதைவிடுத்து ஒரு கடிதத்தை எழுதி ஐ. நா. மனிதஉரிமை பேரவைக்கு அனுப்பிவிட்டு, அது ஊடகங்களில் வெளிவந்துவிட்டதுடன் நமது கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிட்டால் போதுமானதா?

நமது தலைவர்கள் நடந்துகொள்வதைப் பார்க்கின்றபோது தங்கப்பதக்கம் திரைப்படத்தில் சோ அமெரிக்காவையும் ரஷ்யாவையும் எச்சரித்த காட்சிதான் நினைவுக்கு வருகின்றது.

**- ஊர்க்குருவி**

# இ.போ.சவின் வடபிராந்திய அதிகாரிகள் பலர் தனிமை!

**யாழ்ப்பாணம், மாரச் 10**

**இலங்கை போக்குவரத்து சபையின் (இ.போ.ச.) வட பிராந்திய அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனினும் எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்ட னர் என்ற விடயம் வெளிப்படுத்தப்படவில்லை.**

யாழ்ப்பாணம் காரைநகர் இ. போ. ச. சாலையில் 8 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகினர். இதையடுத்து அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் தனியார் போக்குவத்துத் துறையினருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர் என்றும் தெரிய வருகின்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஒருவருக்கும் நேற்று முன் தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்து.

இதனிடையே, தனிமைப்படுத்தப்பட்ட அதிகாரிகள் தற்போது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கு விரைவில் பி. சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் படும் என்றும் சுகாதார துறையினர் தெரிவித்தனர். (ஐ)



## டுபாயில் சிக்கியுள்ள இலங்கையரை சந்தித்துப் பேசிய அமைச்சர் நாமல்

### நாடு திரும்புவதற்கும் விஷேட ஏற்பாடு

கொரோனா தொற்றையடுத்து வேலை வாய்ப்பை இழந்து இலங்கைக்குத் திரும்ப முடியாது டுபாயில் பல்வேறு சிரமங்களை சந்தித்து வந்த இலங்கைத் தொழிலாளர் குழுவினரை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.


கலந்துரையாடலின் பின் அவர்கள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு சிரமங்களால் சொந்த நாடு திரும்ப முடியாத இலங்கை சமூகத்தினரை சந்தித்தோம். அமைச்சர்கள் சானக தினுஷன் மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோருடன் இணைந்து அவர்கள் நாடு திரும்புவதற்கான உதவிகளையும் ஏற்பாடுகளையும் செய்ததில் மகிழ்ச்சி" என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது ருவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

குறித்த குழுவினருக்கு இலங்கை திரும்புவதற்கன விமான டிக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

## வடக்கு – கிழக்கு காணி ஆக்கிரமிப்பு அடுத்தவாரம் "சூம்" கலந்துரையாடல்

### நவநீதம்பிள்ளையும் பங்கேற்பார்



யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப் படும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் அடுத்த வாரம் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் பங்கேற்கவுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஒக்லண்ட் பல்கலைக்கழக முகாமைத்துவ பணிப்பாளர் அனுராதா மிட்டலுடனான மெய்நிகர் சந்திப்புநேற்று யாழ். ஊடக அமையத்தில் நடந்தது. இதன்போதே விக்னேஸ்வரன் எம்.பி. மேற்படி விடயததைக் குறிப்பிட்டார்.

போர் முடிந்து 12 வருடங்கள் நெருங்குகின்றபோதும் இன்னமும் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தின் பிடியில் இருக்கின்றன என்று அனுராதா மிட்டல் சுட்டிக்காட்டினார். அத்துடன், நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான தமது போராட்டத்தை தமிழ் மக்கள் தொடரவேண்டுமென கேட்டுக்கொண்ட அவர், ஊடகவியலாளர்கள் தமது பணியை தளரவிடாது முன்னெடுக்கவும் கோரியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசு தரப்புக்கு....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நியூசிலாந்து தாக்குதல்**

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நியூசிலாந்தில் துப்பாக்கித் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்ததன.

நியூசிலாந்து தாக்குதல்கள் இடம்பெற்றதையடுத்து, சர்வதேச ரீதியாக அனைத்து நாடுகளும் தம்மை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தன.

ஆனால் இலங்கை, புலனாய்வுத் தகவல்கள் முன்கூட்டியே கிடைத்த போதிலும், உரிய நடவடிக்கைள் எடுத்து உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுக்க தவறியிருந்தது.

**மைத்திரியின் வேடிக்கையான கருத்து**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை குறித்து கருத்து வெளியிட்டபோது 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதல் குறித்தும் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தபோதிலும், அந்நாடு அப்பெரும் தாக்குதல்களை தடுக்க தவறியிருந்ததென்று குறிப்பிட்டிருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவின் இக்கருத்து வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

இக்கருத்தின்மூலம் தமது வாயாலேயே புலனாய்வுத்துறை தகவல் கிடைக்கப்பெற்றதை மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்தியுள்ளார். அவரது இக்கருத்தை நோக்கும்போது, அமெரிக்கா ஏதாவது ஒரு தவறைவிட்டிருந்தால் அதனை இலங்கையும் விடுவதில் தவறில்லையென்ற எண்ணத்தை உருவாக்குவதாகவே இருக்கின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை அரசதரப்பில் ஒரு சவாலாகவே அமைந்திருக்கின்றது.

இச் சவாலை அரசதரப்பினர் உரிய வகையில் ஏற்றுக்கொண்டு, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பார்களா? என்ற கேள்வியும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளை ஒளிவு மறை வின்றி சட்டத்தின் முன்னிறுத்தி, உரிய தண்டனை அவர்களுக்கு பெற்றுக்கொடுப்படுமா? என்பதும் முக்கிய கேள்வியாக இருக்கின்றது.




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் (நேரலை)
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# 1400 பாடசாலைகளுக்கு ஏப்ரலுக்கு முன் கை கணனிகள்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 10

**ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் ஆயிரத்து 401 தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு கை கணனிகள் (Tab computers) வழங்கப்படவுள்ளன என்று என்று கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.**

**இதற்காக 'அபான்ஸ்' நிறுவனத்திடம் இருந்து 96 ஆயிரத்து 919 கைக் கணனிகள் வாங்கப்பட்டுள்ளன என்று அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

கேள்வி கோரல் முறைமை மூலம் பல நிறுவனங்களில் இருந்து அபான்ஸ் தெரிவு செய்யப்பட்டது என்றும், இதற்கான நிதி 2020 வரவு - செலவு திட்டத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது எனவும் அமைச்சர் கூறினார்.

உயர்தரப் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்தக் கைக் கணனிகளை வழங்குவதில்லை என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்குள் 3 ஆயிரம் பாடசாலைகளை இணையவசதிகள் கொண்ட பாடசாலைகளாக மாற்றுவதற்கும் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்தப் பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை வழங்குவதற்காக இலங்கை ரெலிக்கொம், மொபிட்டெல் நிறுவனங்கள் இணைந்து செயல்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# இந்தியாவில் உற்பத்தியான ரயில் பெட்டிகள் கிடைத்தன!

*கொழும்பு, மார்ச் 10*

*இந்தியாவிடம் இருந்து 160 ரயில் பெட்டிகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதில், முதல்கட்டமாக 10 ரயில் பெட்டிகள் நேற்று மதியம் கொழும்பை வந்தடைந்தன. தமிழ்நாடு, சென்னை இன்ரகிரால் ரயில் தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளே கப்பல் மூலம் நாட்டை வந்தடைந்தன.*

*இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் 160 ரயில் பெட்டிகளில் ஒவ்வொரு பெட்டிக்கும் 8 கோடி ரூபா செலவாகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.*

*இந்தப் புதிய ரயில் பெட்டிகள், 2019ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட எம் -11 லோகோமோட்டிவ் இன்ஜின்களுடன் இணைப்பதற்காக வடிவமைக்கப்பட்டவை ஆகும். இறக்குமதியாகும் ரயில் பெட்டிகளில் சரக்குப் பெட்டிகள், 41 மூன்றாம் வகுப்பு பெட்டிகள், 35 குளிரூட்டபடப்பட்ட பெட்டிகள் மற்றும் 13 உணவக வகை பெட்டிகளும் அடங்குகின்றன என்று தெரிய வருகின்றது.*

# இஸ்லாத்திற்கு எதிரான பிரசாரங்கள் காழ்ப்புணர்ச்சி நோக்கம் கொண்டவை!

## பாராளுமன்றில் ரிஷாட் பதியுதீன் உரை

கொழும்பு. மார்ச் 10

இஸ்லாத்தை சரியாக புரிந்துகொள்ள தவறியோரும், புரிந்திருந்தும் காழ்ப்புணர்ச்சியுடன் மறைப்போருமே இஸ்லாத் திற்கு எதிரான வீணான பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, " தற்போது, பெண்களின் உடை பற்றி பேசப்படுகின்றது. குறிப்பாக, முகத்தை மூடக்கூடாது எனவும், அது நாட்டுக்கு பாரிய ஆபத்து எனவும் பல வந்தப்படுத்த எண்ணுகின்றார்கள். முகத்தை மூடத்தான் வேண்டுமென நான் இங்கு வலியுறுத்தவில்லை. பெண்களை பொறுத்த வரையில், அவர்களின் ஆடையை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அத்துடன், இன்று சில பெண்கள் அணிகின்ற ஆடைகள், ஆண்கள் கூட பாதைகளில் நடக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றது. இவர்கள் ஆடை அணிந்திருக்கின்றார்களா? என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு இருப்பதை யாரும் கண்டுகொள்வதில்லை. ஆனால், இதற்கு மாற்றமாக, இஸ்லாமியர்களை பழிவாங்குவதற்காக வெறுமனே இவ்வாறன பொய் பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள். அதுமாத்திரமின்றி, சில எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார்கள்.

இஸ்லாமிய அறிஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இவற்றை மேற்கொள்ள வேண்டுமே தவிர, இரவோடு இரவாக இதனை செய்து விட முடியாது. முஸ்லிம்கள் அரசுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, பழிவாங்கும் நோக்குடன் இவ்வாறு செய்ய முடியாது. - என்றார்.

# கிணற்றிலிருந்து முதியவர் உடலம் மீட்கப்பட்டது

*யாழ்ப்பாணம், மார்ச் 10*

*மல்லாகத்தில் கிணறு ஒன்றில் இருந்து முதியவர் ஒருவரின் உடலம் நேற்று மாலை மீட்கப்பட்டது.*

*இவ்வாறு உடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த நல்லதம்பி கதிர்காமலிங்கம் (வயது 70) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*இவரின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை. இது குறித்து தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)*




# கொரோனாவால் மரணிப்பவர்களின் உடல்களை இரணைதீவில் அடக்கம்செய்ய அனுமதியில்லை!

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரண அறிவிப்பு

*கொழும்பு, மார்ச் 10*

*கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடலை இரணை தீவில் அடக்கம் செய்வதற்கான அனுமதியை சுகாதார அமைச்சு இன்னமும் வழங்கவில்லை என அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.*

*கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அடக்கம் செய்வதற்கு இரணை தீவு பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கடந்த அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.*

*அதனை தொடர்ந்து குறித்த பகுதியில் வாழும் மக்கள் அங்கு கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.*

*இந்நிலையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இணையவழியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, "இரணைதீவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?" என ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.*

*இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.*

*"கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடலை இரணைதீவில் அடக்கம் செய்வதற்கான முறையான அனுமதி சுகாதார அமைச்சினால் இன்னமும் வழங்கப்படவில்லை. ஆனால், இப்பொழுது மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்வதற்கே சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்த பின்னராகவே இவ்வாறாக தீர்மானங்களை எடுக்கமுடியும். இந்நிலையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்வதற்கு மாத்திரமே அனுமதி அளித்துள்ளார்" எனவும் அவர் தெரிவித்தார்.*






# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ-பெண்கள் உளவியல்-யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி மேனகா சிவகரன்




**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**

7.00 மணி : COFFE WITH பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்- சூ.அன்ரனிப்பிள்ளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன முன்னாள் உபதலைவர்.



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் (நேரலை)
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் (நேரலை)

---

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் வேலணை சிற்பனை முருகமூர்த்தி கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் ஊரெழு ஞானவைரவர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் வேலணை சிற்பனை முருகமூர்த்தி கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**

12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.